வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 14.12.2022 புதன்கிழமை | இதழ் : 06 | பக்கங்கள் : 16

- *13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல்*
- *தமிழ் மக்களின் நீடிக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு*
- *இணக்கம் எட்டிய அரசமைப்பு தொடர்பில் பேசுதல்!*

# நல்லிணக்கத்துக்கான நடைமுறைகளை ஜனவரி 31இற்கு முன்னர் நிரூபியுங்கள்!

## தமிழ் பேசும் தரப்புகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தின



கொழும்பு, டிசெம்பர் 14

தமிழ் மக்கள் மத்தியில் இன்றும் நீடிக்கும் காணி ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல் கைதிகள் விடுதலை ஆகிய பிரச்னைகளுக்கு தீர்வு காணல், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், புதிய அரசமைப்பு தொடர்பில் ஏற்கனவே எட்டப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் இணக்கப்பாட்டை அடைதல் ஆகிய விடயங்களை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை ஜனாதிபதி தரப்பு செய்ய வேண்டும் என்று தமிழ் பேசும் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. 15

## கல்வி நிறுவனங்களில் போதை; தடுப்பதற்கு விசேட செயலணி!

*கொழும்பு, டிசெ. 14*

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் தீவிரமடைந்துள்ள போதைப் பொருள் பயன்பாடு தொடர்பில் 15

## நியதிகளுக்கு உட்பட்டே கடல் அட்டை பண்ணைகள்!

### குருநகர் கடற்றொழில் சங்கம்

*யாழப்பாணம், டிசெ. 14*

கடல் அட்டைப் பண்ணைகள் சரியான முறையில் - உரிய நியதிகளுக்கு அமையவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாணம் குருநகர் கடற்தொழில் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். 15

## கே. கே. எஸ். - பாண்டிசேரி கப்பல் சேவை ஜனவரியில்!

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு



*கொழும்பு, டிசெ. 14*

இந்தியா - இலங்கை இடையே விரைவில் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் முதல்கட்டமாக பாண்டிச்சேரி - காங் 15

## பெரமுனவுடன் கூட்டணி ஐ. தே. க. சாதக சமிக்ஞை!

*கொழும்பு, டிசெ. 14*

நாட்டின் நலன் கருதியும், நாட்டை மேம்படுத்துவதற்காகவும் மொட்டு கட்சி அல்ல எந்த தரப்புடனும் கூட்டணி வைக்க தயார் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசி 15

## இந்திய கடற்படை தளபதி நேற்று இலங்கை வந்தார்!



*கொழும்பு, டிசெ. 14*

இந்திய கடற்படை தலைமைத் தளபதி ஆர். ஹரி குமார் 4 நாள் பயணமாக நேற்று நாட்டை வந்தடைந்தார். அவரை கடற்படை தளபதி நிஷாந்த உலுகெதென்ன வரவேற்றார்.

இலங்கையில் சீனா தனது ஆதிக்கத்தை விரிவு 15

## சீனா, இந்தியா, ஜப்பானுடனான கடன்மறுசீரமைப்பு பேச்சு வெற்றி!

### மத்திய வங்கி ஆளுநர் அறிவித்தாராம்




*கொழும்பு, டிசெ. 14*

சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடனான பேச்சுகள் வெற்றியளித்துள்ளன என்று மத்திய வங்கி ஆளுநரால் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஜனவரி மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்க முடியும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல 15

## திருக்கேதீஸ்வர ஆலயத்தை திறந்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தினோம்!

### இந்திய வெளிவிவகார அமைச்சர்



*காசி, டிசெ. 14*

“தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரத்தை மீட்டதன் மூலம் இலங்கையில் இந்தியா மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது” என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெயசங்கர் தெரிவித்துள்ளார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்தநாளை தேசிய மொழிகள் 15

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்க் கட்சிகள் ஒன்றையொன்று முட்டிமோதிக் கொண்டிருந்தபோது, அன்றைய நிலையில் தாங்கள் ஆயுத ரீதியாக பலம் பெற்றிருந்தாலும் அரசியல் இயக்கங்களும் பலமடையவேண்டும் அப்படியானால்தான் தங்கள் போராட்டத்துக்கும் அது வலுச் சேர்க்கும் என்று விடுதலைப் புலிகள் யோசித்ததன் விளைவுதான் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது இரகசியமானதல்ல.

கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு பலர் உதவியிருந்தாலும், அது யாரால் எவர் அனுமதியோடு உருவானது என்பது தமிழ் மக்கள் அறிந்ததுதான்.

கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது, புலிகள் எந்தவித சஞ்சலமும் இல்லாமல் அனைவரையும் இதில் இணைக்க சம்மதித்தார்கள். எந்த இயக்கங்களை அழிக்க வேண்டும் என்று நினைத்து முன்னர் செயல்பட்டார்களோ அவர்களையெல்லாம் கூட்டமைப்பில் இணைத்து அவர்களையும் வன்னிக்கு அழைத்து பேசினார்கள்.

அன்று அதற்கான தேவை இருந்தது. இன்றும் அதே போன்றதொரு நிலைமைதான் இருந்துகொண்டிருக்கின்றது.

தமிழ் கட்சிகள் எல்லாமே இன்று தனித்தனியாக வெவ்வேறு திசையில் சென்றுகொண்டிருப்பது தமிழ் மக்களுக்கு கவலைக்குரியது மாத்திரமல்ல - ஆபத்தானதும் கூட. ஆனால், எல்லோரும் ஒற்றுமைப்படவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில்தான் கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி அடுத்த தேர்தலில் தனித்து போட்டியிடுவதுபற்றி யோசிக்கத் தொடங்கியிருக்கின்றது.

அதற்குக் காரணம் என்ன என்பதை கண்டறிய ஆராய்ச்சி தேவையில்லை. தமிழரசு கட்சிக்குள் நிலவும் உட்கட்சிப் போட்டியும் அதற்கு முக்கிய காரணம் என்பது தெரிந்தவர்களுக்கு நன்று தெரிந்ததுதான்.

மாவை. சேனாதிராசாவின் தலைமைத்துவ ஆளுமை குறித்து இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றோம். அவர் இனியும் கட்சியில் தலைமைப் பதவியில் நீடிக்கமுடியாது என்பது அவருக்கும் தெரிந்ததுதான். அதனால்தான் அவரும் கட்சியின் பொதுச்சபையைக் கூட்டி கட்சிக்கு புத்துயிர் அளிக்கப் படவேண்டும் என்ற பலரின் கோரிக்கையையும் தட்டிக்கழித்து வருகின்றார். இன்று சம்பந்தனுக்கு பின்னர் அந்த இடத்துக்கு தமிழரசில் யார் வருவார் என்பது பல பில்லியன் டொலர் கேள்வியாக இருந்து கொண்டிருக்கின்றது.

அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்கு அழைப்பு விடுத்தபின்னர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே தனித்தனியாக பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக இலங்கை தமிழரசு கட்சி ஒன்றே இடம்பெற்றாலும் கூட்டமைப்பு என்பது மூன்று கட்சிகளைச் சேர்ந்தது என்பதாலும் அவர்கள் தமிழரசின் சின்னத் தில் போட்டியிடுவதால் மாத்திரமே பாராளுமன்றில் தமிழரசை பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் என்றாலும் அது மூன்று கட்சிகளை சேர்ந்தது என்பது ஜனாதிபதி அறிந்ததுதான். அதனால்தான் அவர் மூன்று கட்சிகளையும் சந்தித்து பேச்சு பற்றி பேசியிருக்கிறார். புளொட் சித்தார்த்தனையும் ரெலோ செல்வத்தையும் தனித்தனியாக சந்தித்த அவர் சுமார் ஒன்றரை மணி நேரம் பேசியிருக்கிறார். அடுத்து அவர் சந்திக்க வேண்டியது தமிழரசை. தமிழரசுக்கு தலைவர் மாவை. ஆனால், அவர் பாராளுமன்றில் இல்லை. இந்தத் தலைவர்களை எல்லாம் அவர் பாராளுமன்றத் தில் வைத்தே சந்தித்திருந்தார். அப்போது அவர் இந்த பங்காளிகளுடன் தமிழரசு பற்றியும் பிரஸ்தாபித்திருக்கிறார் என்று ஜனாதிபதி தரப்பில் இருந்து அறியமுடிந்தது.

சம்பந்தனுக்கு பின்னர் தமிழரசின் தலைவராக சுமந்திரன் வருவதற்கு முயன்றாலும் சிறீதரன் விடமாட்டார் போல தெரிகின்றதே என்று ரணில் ஒரு கட்டத்தில் பிரஸ்தாபித்ததாகக்கூட தெரியவந்தது.

ஆக, நமது கட்சிகளுக்குள்ளே நடக்கும் இதுபோன்ற சின்னச்சின்ன தகவல்களைக்கூட அறிந்து வைத்திருக்கும் ஜனாதிபதிக்கு இவையெல்லாம் அவரது இலக்கை அடைவதற்கு உதவுமே தவிர தமிழர்களுக்கு உதவப்போவதில்லை.

அதனால்தான், பேச்சு தொடர்பாக தமிழரசுடன் யாரோடு பேசுவது என்பதை கட்சித் தலைவர் மாவையோடோ அல்லது சம்பந்தனோடோ கலந்துபேசாமலே அவர் ஒருவரை சந்தித் திருக்கிறார் என்றால், அதுகூட எதற்காக என்பதை ரணிலை தெரிந்தவர்கள் மாத்திரமே புரிந்துகொள்ளக்கூடியது.!

- ஊர்க்குருவி

# பாலியல் தொல்லைகளுக்கு எதிரான சட்ட ஏற்பாடுகளை வலுவாக்க முடிவு

கொழும்பு, டிசெ. 14

பாலியல் தொல்லைகள் - தொந்தரவுகள், பாலியல் இலஞ்சம் மற்றும் பாலியல் குற்றச் செயல்களுக்கு எதிரான சட்ட ரீதியான ஏற்பாடுகளை வலுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாலியல் தொல்லைகள் அடிப்படை மனித உரிமை மற்றும் சுதந்திரம் மீறப்படுவதுடன், அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் தண்டனை சட்டக்கோவையின் 345ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றங்களுக்கா தண்டனை வழங்குவதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பினும், இப்பிரச்னை தொடர்ந்து நிலவுகின்றமை கண்டறிப்பட்டுள்ளது.

அதனால், பாலியல் தொல்லைகள் மற்றும் அனைத்துவித பாலியல் தொந்தரவுகளைக் குற்றச் செயலாகக் கருதுகின்ற உறுப்புரையை தண்டனைச் சட்டக்கோவையில் உட்சேர்ப்பதற்கும் அதற்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கும் மற்றும் பாலியல் இலஞ்சத்தை குற்றமாக்குவதற்கும் புதிய உறுப்புரைகளை உட்சேர்த்து தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்தம் செய்வதற்கு இயலுமாகும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# நட்டத்தில் சிறீ லங்கன் விமான சேவை; மறுசீரமைக்க அமைச்சரவை அனுமதி!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன



கொழும்பு, டிசெ. 14

சிறீ லங்கன் விமான சேவை நிறுவனம் நஷ்டத்தில் நிர்வகிக்கப்படுகின்ற போதிலும், அதனை மறுசீரமைப்பதற்காக புதிய விமானங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்கிழமை நடைபெற்ற போது , நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சிறீ லங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் 11 விமானங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது என்று கேட்கப்பட்ட போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நிறுவனமொன்று வீழ்ச்சியடைந்ததன் பின்னர் அதனை மறுசீரமைக்க முடியாது. இது வரை கொள்வனவு செய்யப்பட்டுள்ள விமானங்களின் வரிகாலம் நிறைவடைந்தால், அதன் பின்னர் மறுசீரமைக்க முடியாது.

எனவே, நிறுவனம் ஒன்றை நிர்வகித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே அதன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். அதற்கமையவே புதிய விமானங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# புதிய வரித் திருத்தத்துக்கு எதிராக விரிவுரையாளர்கள் புறக்கணிப்பு!

கொழும்பு, டிசெ. 14

புதிய வரித் திருத்தத்துக்கு எதிராக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தினர் நாடளாவிய ரீதியில் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

'அரசாங்கத்தின் வரி விதிப்புக் கொள்கை, மக்களை அழுத்தத்துக்கு உள்ளாக்கும் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் இந்த பணிப் பகிஷ்கரிப்புடன் கூடிய எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் பணிப்பகிஷ்கரிப்பை நேற்று மேற்கொண்டிருந்தனர்.

வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு முன்பாக கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் சக ஊழியர்களும் அமைதியான முறையில் கவனவீர்ப்பில் பங்கேற்றனர். (ஐ)

# மண்ணெண்ணெய்க்கும் கியூ. ஆர். முறைமை?

கொழும்பு, டிசெ. 14

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஜனவரி முதல் மண்ணெண்ணெயை கியூ. ஆர். போன்ற முறைகளின் கீழ் வழங்க ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த, தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 14

திருமறை கலாமன்றம் நடத்தும் 'திருமகனே தாலேலோ' கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்ச்சி எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து திருமறை கலாமன்ற கலைஞர்களும் தேவாலயங்களின் பாடகர் குழாம்களும் வழங்கும் கிறிஸ்மஸ் கரோல் கீதங்கள் இசைக்கப்படும். (ஐ)

# யாழில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு மதிய உணவு!

யாழ்ப்பாணம், டிசெ. 14

சர்வதேச தமிழ் அமைப்புகளின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கான நிதியுதவியை புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் பல சர்வதேச தமிழ் அமைப்புக்கள் வழங்கியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு எதிர்வரும் காலத்திற்கு மதிய உணவு வழங்குவதற்காக சர்வதேச தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளினால் 10 இலட்சம் ரூபாய் பண நன்கொடையும் வட மாகாண கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
14.12.2022 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியா எங்களுக்கு தேவை - அன்ரன் பாலசிங்கம்?

விடுதலைப் புலிகளின் மதியுரைஞரென்று அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கம் காலம்சென்று 16 வருடங்களாகின்றன. 2005இல் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், நோய்வாய்ப்பட்டிருந்த பாலசிங்கம் 2006 டிசெம்பரில் காலமானார். மீண்டுமொரு யுத்தத்துக்கு செல்வது தொடர்பில் மாறுபட்ட பார்வையைக் கொண்டிருந்த பாலசிங்கம், விடுதலைப் புலிகள் அமைப்பை காப்பாற்றும் முயற்சியில் இறுதிவரையில் ஈடுபட்டிருந்தார். 2006 ஜூன் மாதம், இந்திய தொலைக்காட்சியான NDtv இற்கு வழங்கிய நேர்காணலில், விடுதலைப் புலிகள் அமைப்பின் கடந்தகால தவறுகளுக்கு மன்னிப்பு கோரியிருந்தார். யுத்தத்தை நிறுத்தினால் மட்டுமே விடுதலைப் புலிகள் மூச்சுவிட முடியும் - யுத்தத்தை நிறுத்த வேண்டுமாயின், இந்தியாவின் ஆதரவின்றி அதனை சாத்தியப்படுத்த முடியாதென்பதை பாலசிங்கம் தெளிவாகப் புரிந்திருந்தார். இதன் விளைவாகவே, மேற்படி தெலைக்காட்சி நேர்காணல் மூலம் புதுடில்லியுடன் உறவுகளை ஏற்படுத்துவதற்கு பாலசிங்கம் முயற்சித்திருந்தார்.

குறித்த நேர்காணலில், இந்திய படைகளுக்கு எதிராக இரண்டு வருடங்கள் போரிட்டது, பின்னர் இடம்பெற்ற ராஜீவ் காந்தியின் படுகொலை ஆகியவற்றை குறிப்பிட்டு, அதற்கு வருத்தம் தெரிவித்திருந்தார். கடந்த காலத்தை பெருந்தன்மையுடன் பின்னுக்கு வைத்து, இந்தியா மீளவும் ஈழத் தமிழர் பிரச்னையில் தலையீடு செய்ய வேண்டுமென்று கோரினார். ஒருவேளை அவர் இன்னும் சில வருடங்கள் இருந்திருந்தால் ஏதோவொரு வகையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி புலிகளைக் காப்பாற்றும் முயற்சியில் இந்திய கதவுகளை திறந்திருப்பார் என்றும் ஓர் அபிப்பிராயம் உண்டு. இது ஓர் ஊகம் மட்டுமே.

இலங்கையின் சமாதான ஏற்பாடுகளுக்கு தலைமை தாங்கிய எரிக் சொல்ஹெய்ம் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் குறிப்பிடுவார். அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவை சரியாகப் புரிந்துகொள்ளவே இல்லை. பாலசிங்கம் இதனைப் புரிந்துகொள்ளாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை - ஆனால், தத்துவாசிரியர் என்னும் போர்வையை போட்டிருந்ததால் அவரால் அதிகம் பேசமுடியாமல் போயிருக்கலாம். 2002இல், இந்திய ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு பாலசிங்கம் நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார். அதில் - இந்தியா ஒரு பிராந்திய மேலாதிக்க சக்தி, அதனை எட்டவைப்பதற்கு நாங்கள் விரும்ப முடியாது. எங்களுக்கு இந்தியா தேவையென்று குறிப்பிட்டிருந்தார்.

நேர்காண்பவர் பிறிதொரு கேள்வியை முன்வைக்கின்றார். 1989 - 90இல், நீங்கள் பிரேமதாஸவுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டீர்கள், அப்போது, இது எங்களின் உள்ளக பிரச்னை - இதில் இந்தியாவுக்கு ஓர் இடமும் இல்லையென்று கூறினீர்களே, பின்னர் ஏன் இப்போது இந்தியா தேவையென்று கூறுகின்றீர்கள்?

பிரேமதாஸவோடு இணக்கப்பாட்டுக்கு சென்றபோது, நாங்கள் (புலிகள்) அழிவின் விளிம்பில் இருந்தோம். பிரபாகரன் தப்பிப்பிழைப்பதற்காக சண்டையிட்டுக் கொண்டிருந்தார் - பிரேமதாஸவோடு ஓர் உடன்பாட்டுக்கு சென்றால் - முழுமையான அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்று எண்ணினோம். ஆனால், இப்போது நிலைமைகள் மாறிவிட்டன - நாங்கள் இந்தியாவின் பங்களிப்பை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றோம். விடுதலைப் புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில், இவ்வாறனதொரு விடயத்தை பாலசிங்கத்தால் மட்டுமே கூறமுடியும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு தோல்வி அடைந்திருந்தாலும்கூட, விடுதலைப் புலிகள் சார்பில் ஓர் இராஜதந்திரியாகவே பாலசிங்கம் அடையாளம் காணப்பட்டிருந்தார். இந்த பின்புலத்தில் நோக்கினால், அன்றைய சூழலில் ஒரு தமிழ் இராஜதந்திரி என்னும் அந்தஸ்தத்தை பாலசிங்கம் பெற்றிருந்தார். பாலசிங்கத்தை நினைவுகொள்ளும் சூழலில், தமிழ்த் தேசிய கட்சிகள் மீளவும் அரசாங்கத்துடன் பேச்சு ஒன்றில் பங்குகொள்வதற்கு தங்களை தயார் செய்கின்றனர். இந்தியாவின் மத்தியஸ்தத்தை கோர வேண்டுமென்னும் கோரிக்கைகளை பரவலாகக் காண முடிகின்றது. பாலசிங்கம் தனது உரையொன்றில் ரணிலை ஒரு நரியென்றும், அவரை விடவும் மகிந்த பரவாயில்லை என்றும் கூறுகின்றார். ஆனால், இனப் பிரச்னையை தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட இரண்டு வரலாற்று சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியிலிருந்தது.

உண்மையில் ரணில் போன்றவர்களை எதிர்கொள்ளுவதற்கும் கையாளுவதற்கும்தான் இராஜதந்திர ஆற்றல் தேவை - தமிழ் இராஜதந்திரிகள் தேவை. அரசியல் என்பது நரித்தனமாக காட்சியளிக்குமாயின் அதனை கண்டு ஓடுவதில் பொருளில்லை. அதனை அறிவு கொண்டும் - அதே தந்திரம் கொண்டும்தான் நாமும் எதிர்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் வரலாறு பல ஏற்ற இறக்கங்களுடன் பயணித்திருக்கின்றது. ஒவ்வொரு ஏற்ற இறக்கங்களும் நமக்கான அனுபவங்களாகும். இந்த அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதிலும் - கற்றுக்கொண்டதிலிருந்து முன்னோக்கி பயணிப்பதிலும்தான் நமது கெட்டித்தனம் இருக்கின்றது.

# மின்சார கட்டண உயர்வுக்கு எதிராக மனித உரிமை குழுவில் முறைப்பாடு!

*கொழும்பு, டிசெ. 14*

*மின்சார சபை எதிர்கொண்டுள்ள நட்டத்தை ஈடு செய்வதற்காக மின் கட்டணத்தை அதிகரிப்பது கண்டிக்கத்தக்கது. கடும் நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டுள்ள மக்களை பயமுறுத்தி - அச்சுறுத்தி மின் கட்டணத்தை அறவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஊடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.*

*மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் உள்ளிட்ட ஒருங்கிணைந்த தொழில்சங்கங்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்தது.*

*இதன்போது, கருத்து தெரிவித்த நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே மேலும் கூறுகையில்,*

*நாம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை முன்வைத்துள்ளோம். ஜனவரி முதல் மின்கட்டணத்தை அதிகரிப்பிற்கு எதிராக இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளோம்.*

*அதாவது 30 அலகை விட குறைந்த அளவில் பாவித்த மின் அலகொன்றுக்கான கட்டணமாக செலுத்தப்பட்ட 8 ரூபாய் தற்போது 60 ரூபாயாக அதிகரிப்பதற்கு தீர்மானித்திருக்கிறார்கள்.*

*30 அலகுகள் பாவித்த ஒருவரின் மின் கட்டணம் இதன்மூலம் 420 ரூபாயாக செலுத்த வேண்டி ஏற்படும். மேலும், நாட்டு மக்கள் ஜனவரி மாதத்திலிருந்து 2,500 ரூபாவாக செலுத்த வேண்டி ஏற்படும்.*

*இந்நிலையில் நாட்டு மக்களுக்கு மின்வலு அமைச்சரை பார்க்கும்போது அச்சம் ஏற்பட்டுள்ளது. அதாவது பாதாள குழுக்களின் உறுப்பினர் ஒருவர் போன்று செயல்படுகிறார். பாவனையாளர்களுக்கு கடுமையான அச்சுறுத்தலை விடுக்கிறார். அதாவது மின்கட்டணத்தை அதிகரிக்கவில்லை என்றால் ஜனவரி முதல் நீண்ட மின்துண்டிப்பை முகங்கொடுக்க வேண்டும் என்கிறார்.*

*நுகர்வோர்கள் என்ற வகையில் எமக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. எமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே நாம் மனித உரிமை ஆணைக்குழுவிடம் இது தொடர்பில் முறைப்பாடு ஒன்றை முன்வைத்துளோம்*

*மேலும் மின் கட்டணத்தை அதிகரிக்க கூடிய சாதாரண மட்டத்துக்கு மாத்திரமே அதிகரிக்க முடியும். அதற்கு மேலதிகமாக கட்டணம் அறவிடப்படும் என்பது நியாயமற்றதாகும் - என்றார். (ஐ)*

# மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஜனவரி முதல் குறைவடையும்!

## அமைச்சர் கெஹலிய

*கொழும்பு, டிசெ. 14*

*நாட்டில் நிலவிய மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு எதிர்வரும் ஜனவரி மாதமளவில் குறைவடையக் கூடும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.*

*27 மில்லியன் டொலர்கள் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிடைத்தன என்றும் அவர் கூறினார்.*

*இதனிடையே, 42 மில்லியன் டொலர்கள் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் அமெரிக்காவிடமிருந்து கிடைக்கவுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)*

# ஒழுக்கமற்ற செயல்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் மீது கடும் நடவடிக்கைகள்

*கொழும்பு, டிசெ. 14*


*பல்கலைக்கழகங்களுக்குள் ஒழுக்கமற்ற செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதன் மூலமே பல்கலைக்கழக அமைப்பைப் பாதுகாக்க முடியும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.*

*நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்தன இதனை கூறினார்.*

*இதேவேளை, பல்கலைக் கழகங்களுக்குள் போதைப் பொருள் உட்புகுந்தமை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*எனவே மாணவர்கள் அச்சம் இன்றி பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 14 புதன்கிழமை
சுபகிருது வருடம் - கார்த்திகை 28
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சஷ்டி




**மேடம்**
செயல்களில் கவனம் செலுத்துங்கள். நீண்ட முயற்சிக்குப்பின் உங்கள் எண்ணம் நிறைவேறும். உறவினர் ஒருவர் உதவி புரிவார். நண்பர்களிடையே சில பிரச்னைகளை சந்திப்பீர்கள்.

**இடபம்**
நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் நண்பர்கள் உதவியுடன் வெற்றி காண்பீர்கள். நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்கள் செயல்களுக்கு தடையாக இருந்தவர்கள் விலகிச் செல்வார்கள்.

**மிதுனம்**
வார்த்தைகளில் கவனம் தேவை. மற்றவரின் செயல்பாட்டால் எரிச்சல் ஏற்படும். மவுனம் நன்மை தரும். குடும்பத்தில் ஒருவரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

**கடகம்**
வேலை பளு அதிகரிக்கும். மனதில் குழப்பம் ஏற்படும். செயல்களில் கவனம் தேவை.மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். செயலில் இருந்த தடை விலகும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**
குடும் பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.அலைச்சல் கூடும். திடீர் செலவு தோன்றும். சிந்தித்து செயல்படுங்கள்.வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட பிரச்னை விலகும். குடும்பத்திற்காக செலவிடுவீர்கள்.

**கன்னி**
எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். பொருளாதார நெருக்கடி தீரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். வரவேண்டிய பணம் வரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்**
வியாபாரத்தில் இருந்த தடங்கல்களை சரி செய்வீர்கள். முயற்சி இழுபறியாகும். பிறரிடம் எச்சரிக்கை தேவை. தொழிலில் போட்டியும் எதிர்ப்புகளும் அதிகரிக்கும். சிந்தித்து செயல்படும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். முன்னோர் ஆசியால் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடக்க அறிகுறி தென்படும். திட்டமிட்டு எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**தனுசு**
பயணத்தால் அலைச்சல் உண்டாகும். அதனால் நன்மை ஏற்படும். பொருளாதார நெருக்கடி சரியாகும். நேற்றைய கடனை அடைக்க முயற்சிப்பீர்கள். நிம்மதியான நாள்.

**மகரம்**
எண்ணம் நிறைவேறும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். வாழ்க்கைத்துணை மூலம் முயற்சி பலிக்கும். மகிழ்ச்சியான நாள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**கும்பம்**
விலகிச் சென்றவர் உங்களைத் தேடி வருவர். நிம்மதியான நாள். திட்டமிட்டு செயல் பட்டுவீர்கள். பிறர் உங்களுக்கு உதவி செய்வார்கள்.தொல்லை கொடுத்தவர் விலகுவார்கள். நிம்மதியான நாள்.

**மீனம்**
ஒரு சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். பிள்ளைகள் குறித்த கவலைகள் வந்து மறையும்.அந்நியரால் பணி இடத்தில் ஏற்பட்ட பிரச்னையை முடிவுக்கு வரும். அலுவலகத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். நிதானமாக செயல் படுவீர்கள்.

# இளைஞர்களை சரியான பாதையில் திருக்குறள் மட்டுமே அழைத்துசெல்லும்!

## உயர்நீதிமன்றம் தெரிவிப்பு

மதுரை, டிசெ. 14

“‘திருக்குறளால் மட்டுமே இளைஞர்களை சரியான பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும். மாணவர்களுக்கு திருக்குறளை கற்பிப்பது காலத்தின் கட்டாயம்’ என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த ராம்குமார், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில், “தமிழகத்தில் 6 முதல் 12ம் வகுப்பு வரையிலான பாடத் திட்டத்தில் திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பாலில் 108 அதிகாரங்களில் உள்ள 1050 குறளையும் சேர்க்கவும், தேர்வுகளில் திருக்குறளில் இருந்து கேள்விகள் கேட்கவும் உத்தரவிட வேண்டும்” என்று கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர்.மகாதேவன், ஜெ.சத்ய நாராயண பிரசாத், “அனைத்துக்கும் திருக்குறளில் தீர்வு உள்ளது. இதனால் திருக்குறள் அதன் பிறப்பிடத்தை காட்டிலும் மற்ற இடங்களில் அதிகளவில் கொண்டாடப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்கம், சகிப்பு தன்மை ஏற்பட திருக்குறளை கற்பிப்பது காலத்தின் கட்டாயம்.

இளைஞர்களை சரியான பாதைக்கு அழைத்துச் செல்ல திருக்குறளால் மட்டுமே முடியும். இதனால் 6 முதல் 12 வரை திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பாலில் உள்ள 108 அதிகாரங்களையும் கற்பிக்க உத்தரவிடப்பட்டது. ஆனால், அதிகாரிகள் இந்தக் குறள்களை பாடப்புத்தகத்தில கடைசியில் பெயரளவில் சேர்த்துள்ளனர். தேர்வுகளில் திருக்குறளில் இருந்து கேள்விகள் கேட்கப்படவில்லை. இதற்கு நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்தது.

இதையடுத்து 10 முதல் 12 வகுப்பு வரை 2022- 2023 கல்வியாண்டில் திருக்குறளின் 108 அதிகாரங்கள் சேர்க்கப்பட்டு 10 முதல் 20 மதிப்பெண்களுக்கு கேள்விகள் கேட்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது. நடப்பு கல்வியாண்டில் 6 முதல் 9 வகுப்பு தேர்வுகளில் 108 அதிகாரங்களும் சேர்க்கப்பட்டு தேர்வுகளில் கேள்வி கேட்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இது பதிவு செய்யப்படுகிறது. இந்த நடவடிக்கையை 3 மாதத்தில் முடிக்க வேண்டும். நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்பட்டது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்” இவ்வாறு உத்தரவிட்டனர்.

# உதயநிதி அமைச்சராக இன்று பதவியேற்கிறார்!

சென்னை, டிசெ. 14

தமிழக அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் இன்று புதன் கிழமை பதவியேற்கிறார். அவருக்கு ஆளுநர் ஆர். என். ரவி பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.



2021 சட்டப்பேரவை தேர்தலில் தி. மு. க. வெற்றி பெற்று, முதல்வராக மு.க. ஸ்டாலினும், 33 அமைச்சர்களும் பொறுப்பேற்றுக் கொண்டனர். பின்னர் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அமைச்சரவையில் துறைகள் மாற்றம் நடைபெற்றன. எனினும், அமைச்சரவை விரிவாக்கம் நடைபெறவில்லை.

தி. மு. க. அமைச்சரவை பொறுப்பேற்றபோதே கட்சியின் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு அமைச்சரவையில் இடம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. பின்னர், உதயநிதி அமைச்சராக வேண்டும் என்று சில அமைச்சர்கள் பேசினர். ஆனால், முதல்வர் ஸ்டாலின் மௌனமாக இருந்துவிட்டார்.

இந்நிலையில், தி. மு. க. உட்கட்சி தேர்தல்கள் முடிந்து, இளைஞரணி செயலாளராக மீண்டும் உதயநிதி ஸ்டாலின் தெரிவானார். இதையடுத்து, அவரை அமைச்சராக்க வேண்டும் என்று அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்டோர் பேசி வந்தனர்.

இந்நிலையில், உதயநிதியை அமைச்சரவையில் சேர்க்க முதல்வர் ஸ்டாலின் ஒப்புதல் அளித்து, ஆளுநர் மாளிகைக்குப் பரிந்துரைத்துள்ளார்.இதையடுத்து, இன்று காலை 9.30 மணிக்கு ஆளு நர் மாளிகையில் உதயநிதி அமைச்சராக பதவியேற்க உள்ளார்.

இதையடுத்து, உதயநிதிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகியவை ஒதுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

அமைச்சரவை விரிவாக்கம் தவிர, சில மூத்த அமைச்சர்கள் கவனிக்கும் துறைகளும் மாற்றம் செய்யப்படும் எனத் தெரிகிறது. (ஐ)

# ஜல்லிக்கட்டு போட்டிகள் திட்டமிட்டபடி நடைபெறும்!

## தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, டிசெ. 14

2023ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டிகள் திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறும் மாவட்டங்களில், வரும் ஜனவரி ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டி உலகப் புகழ்பெற்றவை. வழக்கமாக ஜனவரி பொங்கல் பண்டிகையையொட்டி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்தப்படுவது வழக்கம்.

பொங்கல் பண்டிகையன்று அவனியாபுரத்திலும் ஜனவரி 15 ஆம் தேதி பாலமேட்டிலும் 16ஆம் தேதி அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்நாட்டில் மது விலக்கை நடைமுறைப்படுத்துங்கள்!

## சரத்குமார் வலியுறுத்து

சென்னை, டிசெ. 14

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்தக் கோரி சரத்குமார் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர்,

“மதுவிலக்கை கொண்டுவருவதால் மதுவின் மூலம் அரசுக்கு வருவாய் கிடைப்பது பாதிக்கும். இதன் காரணமாக வருமானத்தை ஈடுசெய்வதில் சிரமம் ஏற்படும். இதற்கு மாற்று யோசனையை முன்வைக்கவுள்ளோம். காவல்துறையின் சிறப்பான செயல்பாட்டை மீறி போதைப் பொருள்கள் தமிழகத்திற்குள் கடத்தப்படுகின்றன. பள்ளிச் சிறுவர்கள் போதைப்பொருள்களை பயன்படுத்துகின்றனர். பூரண மதுவிலக்கால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்பது உண்மைதான். அதை மாற்ற தொழிற்சாலைகளை உருவாக்கி, அதிக வேலைவாய்ப்பை இளைஞர்களுக்கு வழங்கலாம்.

மதராஸ் மாகாணத்தில் 30 ஆண்டுகளுக்கு மேல் மதுவிலக்கு சாத்தியமானது. ராஜாஜி காலத்தில் மதுவிலக்கு சாத்தியமானது எப்படி என்பது குறித்து ஆராய வேண்டும். மது ஆலைகளை மூட முடியாவிட்டால் அதை வேறு வெளிமாநிலத்திற்கு மாற்றலாம். மது ஆலை என்பதும் ஒரு தொழில்தான். பூரண மது விலக்கால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய ஆற்று மணல் , கிரணைட் தொழிலை அரசே ஏற்று நடத்தலாம் - என்றார். (ஐ)

# யார் பிரிந்து சென்றாலும் கூட்டமைப்பு செயற்படும்!

## புளொட் கஜதீபன் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து யார் பிரிந்து சென்றாலும் கூட்டமைப்பாக நாம் தொடர்ந்து செயல்படுவோம் என தெரிவித்த புளொட்டின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான பா.கஜதீபன், இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனியாக செல்வதை நாம் விரும்பவில்லை என்றும் கூறினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதன்போது, உள்ளூராட்சி தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்து போட்டியிட வேண்டுமென உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தினர். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அதிக ஆசனத்தை பெறுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் தனித் துப் போட்டியிடுவது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் விடயங்களை ஆராய்ந்து வருவதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது கஜதீபன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊடகங்கள் ஊடாகவே இந்த செய்தியை நாம் அறிந்திருந்தோம். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் யாரும் இது பற்றி எங்களுடன் இது குறித்து பேசவில்லை. இது தொடர்பில் அவர்கள் முடிவெடுத்த பின்னர் நாம் இதை பற்றி விரிவாக ஆராய முடியும் - என்றார். (அ)



# வட்டுவாகலில் மீண்டும் காணி சுவீகரிப்பு முயற்சி!

## கடற்படை முகாமிற்கு முன்னால் கூடினர் மக்கள்

முல்லைத்தீவு, டிசெ. 14

முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் கடற்படை முகாமிற்கு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கொழும்பில் இருந்து ஒரு அணி, நில அளவை மேற்கொள்ளவுள்ளதாக தகவல் அறிந்ததையடுத்து, அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக கடற்படை முகாமிற்கு முன்னால் மக்கள் திரண்டனர்.

இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற நிலையில் குறித்த பகுதியில் சுமார் பத்திற்கும் மேற்பட்ட புலனாய்வாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் நிலங்களை கடந்த 13 வருடங்களாக ஆக்கிரமித்து பாரிய கடற்படை முகாம் ஒன்றைக் கடற்படையினர் அமைத்துள்ளனர்.

அந்த காணிகளை கடந்த சில வருடங்களாக படை முகாமின் தேவைக்காக நிரந்தரமாக சுவீகரிக்கும் பொருட்டு பல தடவைகள் நில அளவைத் திணைக்களத்தால் அளவீடு செய்ய எடுத்த முயற்சிகள் மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தன.

அத்துடன் காணி எடுத்தற் சட்டம் 05 ஆம் பிரிவின் (1) ஆம் சரத்திற்கு அமைய காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கட்டளை நிமித்தம் 2017ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானியின் பிரகாரம் கரைத்துறைபற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வட்டுவாகல் மற்றும் முள்ளி வாய்க்கால் கிழக்கு பகுதியிலுள்ள 271.62 ஹெக்டெயர் காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது என வர்த்தமானி வெளியாகியிருந்தது.

அதனையடுத்து, காணி உரிமையாளர்களான தமிழ் மக்களை காணி ஆவணங்களோடு வருகைதந்து கடற்படை முகாமுக்கு காணியை வழங்க எல்லைகளை அடையாளம் காட்டுமாறு நில அளவை திணைக்களத்தால் பல தடவைகள் அறிவித்தல் விடுக்கப்பட்டு அளவீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட ஏற்பாடாகியிருந்தன.

எனினும் மக்கள் அதற்கு இடமளிக்காததன் காரணமாக நில அளவை செயற்பாடு பல காலமாக இழுபறி நிலையிலேயே இருந்துகொண்டிருக்கின்ற நிலையில் நேற்று மீண்டும் காணி சுவீகரிப்புக்கான அளவீட்டுப் பணிகள் இடம்பெறவிருப்பதாக தகவல் அறிந்ததையடுத்து, மக்கள் கூடினர்.

இதன்போது, நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ள வருபவர்களை முகாமுக்குள் அனுமதிக்கமாட்டோம் எனவும் அவர்கள் வந்தால் திருப்பி அனுப்புவோம் எனவும் மக்கள் தெரிவித்தனர். (அ)

# மக்களே அவதானம்!

கொழும்பு, டிசெ. 14

மோசடியான தொலைபேசி அழைப்புக்கள், குறுந்தகவல்கள், மின்னஞ்சல்கள் மற்றும் சமூக வலைத்தள வலையமைப்புகள் ஊடாக ஆட்களை ஏமாற்றுவது தொடர்பில் பொது மக்களை மிக அவதானத்துடன் இருக்குமாறு மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது.

வெளிநாட்டுத் தொழிலுக்கு அனுப்புவதாக வாக்குறுதியளித்து அல்லது பல்வேறு பெறுமதி வாய்ந்த பொருட்களைக் கொண்ட பொதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு சுங்க வரிகளைச் செலுத்துமாறு கோரி இவ்வாறான மோசடிகள் இடம் பெறுகின்றதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது போன்ற மோசடிகள் மூலம் தனிப்பட்டவர்களிடமிருந்து பண மோசடி செய்வது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களால் வழங்கப் பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் அண்மைக்காலத்தில் துரித அதிகரிப்பு ஒன்றை அவதானிக்க முடிவதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எனவே, முறையான சரிபார்த்தலின்றி மேற்குறித்த தகவல்களின் அடிப்படையில் இனந்தெரியாத தரப்பினர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை வைப்பிலிட வேண்டாம் என்றும் அல்லது வேறு வழிகளில் பணம் அனுப்ப வேண்டாம் என்றும் நிதியியல் உளவறிதல் பிரிவு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

மேலும், அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மோசடிக்காரர்கள் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை முன்னெடுக்கும் பொருட்டு உங்களிடமிருந்து பின்வரும் தகவல்களைக் கோரலாம்.

தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN)

அட்டைகளின் புறப்பக்கத்தில் குறிப்பிடப் பட்டவாறான கொடுப்பனவு அட்டைகளை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் அட்டை சரிபார்த்தல் பெறுமானங்கள் (CVV)

கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்து வதற்கு பயன்படுத்தப்படும் ஒரு தடவை கடவுச்சொற்கள் (OTP)

செல்லிட வங்கிச் சேவையில்/இணையவழி வங்கிச் சேவையில் பயன்படுத்தப்படுகின்ற பயனர் அடையாளங்கள், கடவுச்சொற்கள் மற்றும் ஒரு தடவை கடவுச்சொற்கள்.

எனவே, அத்தகைய அந்தரங்கத் தகவல்களை எவரேனும் மூன்றாம் தரப்பினரிடம் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்றும் அத்தகைய மோசடிகள் பற்றி விழிப்பாக இருக்குமாறும் நிதியியல் உளவறிதல் பிரிவு பொதுமக்களை மேலும் வலியுறுத்துகின்றது.

இவ்வாறான குறுஞ்செய்திகள், மின்னஞ்சல் செய்திகள் கிடைக்கப் பெற்றால், நிதியியல் உளவறிதல் பிரிவின் 011-2477125, 011-2477509 என்ற இலக்கங்களுக்கு அழைத்து அறிவிக்குமாறு மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (அ)



# குறுகிய காலத்துக்குள் நல்ல தீர்வு தாருங்கள்

## ஜனாதிபதியிடம் எடுத்துரைக்க முற்போக்கு கூட்டணி முடிவு

கொழும்பு, டிசெ. 14

**குறுகிய காலத்துக்குள் தமிழ் மக்களுக்கு நல்லதொரு அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்துவோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் தெரிவித்தனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர்களின் இனப்பிரச்னை தொடர்பில் நீண்டகாலமாகத் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தந்தை செல்வா காலம் முதல் இது தொடர் கதையாகவே உள்ளது.

அவ்வாறில்லாமல் குறுகிய கால அவகாசத்துக்குள் தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வு தருமாறு ஜனாதிபதியிடம் நாம் வலியுறுத்துகிறோம் - என்றனர்.

## கோர விபத்தை ஏற்படுத்திவிட்டு வெளிநாடு தப்பிய சாரதி கைது!

கொழும்பு, டிசெ. 14

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற கோர விபத்தின் பின்னர் வெளிநாட்டுக்கு தப்பிச்சென்றிருந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் மீண்டும் நாடு திரும்பிய போது கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

கடந்த 10ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் சொகுசு காரொன்று முச்சக்கர வண்டியை மோதி விபத்துக்குள்ளாக்கியதில், முச்சக்கரவண்டியின் சாரதி உயிரிழந்தார்.

காரை செலுத்திய குறித்த சந்தேகநபர் அன்றைய தினமே டுபாய்க்கு தப்பிச் சென்றிருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபருக்கு எதிராக வெளிநாட்டு பயணத் தடை பெறப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபர் மீண்டும் நாடு திரும்பிய சந்தர்ப்பத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 26 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (அ)

## 6 பல்கலை மாணவர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 14

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன மற்றும் அவரது மகன் உள்ளிட்டோரை தாக்கிய சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்கள் 6 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த மாணவர்கள் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததை அடுத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் 23 மற்றும் 25 வயதுடைய நிட்டம்புவ, கிரிதலை, மாத்தளை மற்றும் ஹேன்கமுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் மேலும் 6 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகளும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்று, 12 பல்கலைக்கழக மாணவர்கள் தாக்குதல் தொடர்பாக அடையாளம் காணப்பட்டதுடன், அவர்களின் மாணவர் தகுதியும் இரத்து செய்யப்பட்டது. (அ)

## இரத்தினக்கல் தோண்டிய இளைஞர் மண்மேடு சரிந்து வீழ்ந்து உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 14

கெசல்கமஓயா காப்புக்காட்டில் அனுமதிப்பத்திரம் இன்றி இரத்தினக்கல் தோண்டிய இளைஞர் ஒருவர் மண்மேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

அனுமதியின்றி இரத்தினக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த இளைஞரொருவர், காசல்ரி நீர்த்தேக்கத்துக்கு பிரதானமாக தண்ணீர் செல்லும் கெசல்கமஓயா காப்புக்காட்டில் நேற்று முன் தினம் பிற்பகல் மண் மேட்டின் கீழ் விழுந்துள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ டின்சின் பகுதியைச் சேர்ந்த கனகரத்தினம் குகேந்திரன் (வயது 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன் நேற்று முன் தினம் பிற்பகல் 3 மணியளவில் தனது வசிப்பிடத்தை ஒட்டியுள்ள கெசல்கமஓயா காப்புக்காட்டில் மற்றுமொரு குழுவினருடன் இணைந்து பெரிய பள்ளம் தோண்டிக் கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

உடன் இருந்தவர்களும், சுற்றுவட்டார மக்களும் இணைந்து குழிக்குள் மண் மேட்டின் கீழ் புதையுண்ட இளைஞனை, சுமார் 2 மணித்தியாலங்களின் பின் சுமார் 20 அடி ஆழமுள்ள குழியில் இருந்த மண்ணை அகற்றிக் கொண்டு சென்றதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. (அ)

## டிசெம்பர் 26 முதல் 30ஆம் திகதி வரை உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்புமனு

கொழும்பு, டிசெ. 14

24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகளுக்கு 8,327 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை டிசெம்பர் இறுதி வாரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடும் என அதன் ஆணையாளர் நாயகம் எஸ்.ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

“தேர்தல் ஆணைக்குழு கடந்த வாரம் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இவ்வருடம் டிசெம்பர் 26 முதல் 30ஆம் திகதி வரை தாக்கல் செய்வதற்கு தீர்மானித்தது,” என அவர் கூறினார்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஜனவரி நடுப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்படும் மற்றும் 2017 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி 2023 பெப்ரவரி பிற்பகுதியில் தேர்தல் நடத்தப்படும்.

வேட்புமனு தாக்கல் முடிந்து ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என அவசரச் சட்டத்தின் 26 ஆவது பிரிவு கூறுகிறது.

வேட்புமனுக்கள் அறிவிக்கப்பட்ட 14 ஆம் திகதி மறு நாள் மதியம் 12.00 மணி வரை பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களால் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல்கள் வெளிநாட்டு பார்வையாளர்களால் கண்காணிக்கப்படுமா என கேட்டதற்கு, பவ்ரல் அல்லது வேறு ஏதேனும் உள்ளூர் தேர்தல் கண்காணிப்பு தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் இருந்து வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கான அனுமதிக்கு இதுவரை தேர்தல் ஆணையத்திற்கு எந்த கோரிக்கையும் அனுப்பப்படவில்லை. ஆனால் அவ்வாறான கோரிக்கை எழுந்தால் அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு பரிசீலிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையத்தால் நிறைவு செய்யப்பட்டுள்ள 2022 வாக்காளர் பதிவேடு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படும். மொத்தம் 166,92,398 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## ரயில்வே திணைக்களம் அதிகார சபையாக மாறும்?

கொழும்பு, டிசெ. 14

ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றினால் தொழில் ரீதியாக நடவடிக்கை எடுக்க அதன் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, ஊழியர்களின் கருத்தைக் கேட்காமல் திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றுவதற்கான திட்டங்களை வகுத்து வருவதாக ரயில்வே தொழிற்நுட்ப வல்லுநர்கள் சங்கத் தலைவர் எச்.ஆர்.பி. உதயசிறி தெரிவித்துள்ளார். (அ)

## இறைச்சிக் கடைகளில் சோதனையை அதிகரிக்க சுகாதார பரிசோதகர் முடிவு

கொழும்பு, டிசெ. 14



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கால்நடைகள் மற்றும் ஆடுகளின் மரணத்தை கருத்தில் கொண்டு இறைச்சி பரிசோதனைகளை அதிகரிக்க இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கூறுகையில்-

கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது, பல பகுதிகளில் முறையான அனுமதியின்றி மாட்டிறைச்சி மற்றும் ஆட்டு இறைச்சி விற்பனை செய்யப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

நுகர்வோர் அங்கீகரிக்கப்பட்ட முத்திரையுடனான இறைச்சியை மாத்திரமே கொள்வனவு செய்ய வேண்டும் - என்றார். (அ)

## அரசாங்கத்தின் உதவிகள் பெற 37 இலட்சம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, டிசெ. 14

அரசின் நலத்திட்ட உதவிகள் பெற, 37 இலட்சம் பேரிடம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக, நலன்புரிப் பலன்கள் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முழு இலங்கையையும் உள்ளடக்கிய பிரதேச செயலக மட்டத்தில் அரசாங்க உதவியைப் பெறத் தகுதியுள்ள தனிநபர்கள் மற்றும் குடும்பங்களை அடையாளம் காண்பதற்கான தகவல்கள் பெறப்பட்டதாகவும், அதன்படி 37 இலட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் நலன்புரிப் பலன்கள் சபை குறிப்பிடுகிறது.

இந்தத் தகவல் சேகரிப்பின் இரண்டாம் கட்டத்தின் கீழ், கள அலுவலர்கள் விண்ணப்பதாரரிடம் சென்று தகவல்களைச் சேகரித்து உறுதிப்படுத்தவுள்ளனர் என மேற்படி சபை தெரிவித்துள்ளது. (அ)

## 5 வங்கிகளுக்கு நிதி அபராதம்

கொழும்பு, டிசெ. 14

இலங்கை மத்திய வங்கி 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி பரிவர்த்தனைகள் அறிக்கை சட்டத்தின் விதிகளுக்கு இணங்காத ஐந்து வங்கிகளுக்கு நிதி அபராதம் விதித்துள்ளது.

டி.எவ்.சி.சி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றுக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அபராதமாக வசூலிக்கப்பட்ட பணம் ஒருங்கிணைந்த நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# குளிரினால் ஏற்பட்ட அதிர்ச்சியே கால்நடை உயிரிழப்புக்கு காரணம்

## விவசாய அமைச்சு கூறுகிறது

கொழும்பு, டிசெ. 14

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாடுகள் மற்றும் ஆடுகள் உயிரிழந்தமைக்கான காரணம் குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியே என விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக நிலவிய மோசமான வானிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1,660 பசுக்கள், எருமைகள் மற்றும் ஆடுகள் உயிரிழந்துள்ளன. அதிக எண்ணிக்கையிலான பிற விலங்குகளும் முக்கியமானவை.

இந்த திடீர் மிருக மரணங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தி அறிக்கையை வழங்குமாறு விவசாய, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்படி, பேராதனை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கால்நடை மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையை விவசாய அமைச்சரிடம் கையளித்துள்ளது.

அதற்கமைய, குறித்த விலங்குகள் இறந்ததற்குக் காரணம் தொற்றுநோய் அல்ல, மாறாக கடுமையான குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியே காரணம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இரண்டு நகர சபைகள் மாநகர சபைகளாகின

கொழும்பு, டிசெ. 14

அம்பாறை மற்றும் மன்னார் நகர சபைகளை மாநகர சபையாக தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தற்போதுள்ள உள்கட்டமைப்பு மற்றும் மனித வளத்தைப் பயன்படுத்தி, கூடுதல் வளங்களைச் செலவிடாமல், நகர்ப்புற வளர்ச்சித் தேவைகளை நிறைவேற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போதுள்ள அனைத்து பிரதேச சபைகளையும் நகர சபைகளாக மாற்ற முடியுமா என்பது தொடர்பில் ஆராயுமாறு பிரதமர் தினேஸ் குணவர்தனவிடம், அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். (அ)

# மின் கட்டண நிலுவையை செலுத்த அமைச்சர்களுக்கு 2 வார அவகாசம்

கொழும்பு, டிசெ. 14

தற்போதைய அமைச்சர்களுக்கு மின் கட்டணத்தை செலுத்துவதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த, பல அமைச்சர்களினால் அதிகளவான மின்சாரக் கட்டணங்கள் தீர்க்கப்படாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு புதிய செயல்முறையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமைச்சர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் அவர்களது உத்தியோகபூர்வ இல்லங்களை காலி செய்ய மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும், அந்த காலத்தின் போது அத்தகைய வீடுகளுக்கான கட்டணங்கள் செலுத்தப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

இந்த முரண்பாடு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதுடன், செலுத்தப்படாத தொகை இலட்சக்கணக்கான ரூபாயாக அதிகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

உத்தியோகபூர்வ இல்லங்களின் செலுத்தப்படாத கட்டணங்கள் மீதும் மேலதிகமாக வட்டி சேர்க்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார். (அ)

# திலினிக்கு மீண்டும் மறியல்!

கொழும்பு, டிசெ. 14

வர்த்தகர்கள் மற்றும் பிரமுகர்களிடம் இருந்து பணத்தை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள திலினி பிரியமாலியின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (அ)

# சிறப்புற இடம்பெற்ற முல்லை. மாவட்ட வர்ண இரவு விருது வழங்கும் நிகழ்வு!

முல்லைத்தீவு, டிசெ. 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்த வீர வீராங்கனைகளை கௌரவப்படுத்துவதற்கான வர்ண இரவு நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் சிறப்புற இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(நிர்வாகம்) க.கனகேஸ்வரன் தலைமையில், முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் கலந்து சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை பரீட்சை திணைக்கள பரீட்சை ஆணையாளர் எம்.ஜீவராணி புனிதா மற்றும் முன்னாள் முல்லை மாவட்ட விளையாட்டு வீரரும், தற்போதைய யாழ். போதனா வைத்தியசாலையின் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் கதிர் வேல் இளஞ்செழியப் பல்லவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக



முல்லை மாவட்டத்தின் முன்நாள் சிறந்த உதைபந்தாட்ட வீரரும் கிளிநொச்சி மாவட்ட செயலக பயிற்றுநரான எஸ்.ஐ. ஆசைநாதர் மற்றும் கராத்தே குத்துச் சண்டையில் தேசிய பதக்கம் பெற்ற வீரரும், முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய குத்துச் சண்டை கராத்தே பயிற்றுனரும், பல தேசிய மட்ட வீரர்களை உருவாக்கி வருபவருமான கா. நாகேந்திரம்(வள்ளுவன் மாஸ்ரர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது முல்லைத்தீவு நகரின் சுற்றுவட்ட வீதியிலிருந்து அதிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் பண்டவாத்திய இசைக்கருவிகளுடன் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், வரவேற்புரை, வரவேற்பு நடனம் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வுகள் மற்றும் கலைநிகழ்வுகள், அதிதிகளின் உரைகள், அதிதிகளுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கல், வீரர்களின் விளையாட்டு அறிமுகம் முதலான நிகழ்வுகள் இடம்பெற்றன.

இவ் விருது வழங்கும் நிகழ்வில் மூத்த மற்றும் மறைந்த விளையாட்டு வீரர்களுக்கான மதிப்பளிப்பு, விளையாட்டுத் துறையில் பிரகாசித்த பாடசாலைகளின் அதிபர்களுக்கான கௌரவிப்பு மற்றும் விளையாட்டுத் துறையில் தேசிய, மாகாண போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்த முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சேர்ந்த வீர வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு, பயிற்றுனர்களுக்கான கௌரவிப்பு, பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கான கௌரவிப்பு, திறந்த போட்டியில் தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான கௌரவிப்பு, இடமாற்றலாகிச் சென்ற விளையாட்டு பிரிவு உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு உள்ளிட்ட மொத்தமாக 297 விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலை மாணவர் அனுமதிக்கு குடும்ப அட்டை கேட்பது தவறு!

## மனித உரிமைகள் ஆணைக்குழு கூறுகிறது

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாணத்தில் மட்டும் நடைமுறையில் உள்ள குடும்ப அட்டை முறைமை குடும்ப விவரங்களையோ அல்லது வதிவிடத்தையோ உறுதிப்படுத்தும் சட்டரீதியான ஆவணம் அல்ல என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தினத்தன்று சட்டத்துக்கு மனித உரிமைக்கான அமைப்பு ஏற்பாடு செய்த கலந்துரையாடல் நிகழ்வில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் குடும்ப அட்டை விவகாரம் தொடர்பில் முரண்பாடான சம்பவங்கள் எமது கவனத்திற்கு வருகின்றன.

குடும்ப அட்டையில் உள்ள விபரங்களை வைத்து பாடசாலை அனுமதி, பொருட்கள் விநியோகம் மற்றும் ஏனைய உறுதிப்படுத்தல் சார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு மாணவனின் பாடசாலை அனுமதிக்கு வதிவிடத்தை உறுதிப்படுத்த குடும்ப அட்டையை கேட்பது தவறாகும்.

அண்மையில் ஏற்பட்ட கொவிட் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலமையில் உணவுப் பொருட்கள் விநியோகம் எரிபொருள் என்பவற்றுக்கு குடும்ப அட்டை மூலம் விநியோகிக்கும் நடமுறை காணப்பட்டது.

வடக்கு மாகாணத்துக்கு வெளியில் குடும்ப அட்டை நடைமுறை காணப்படாத நிலையில் சில ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வதற்காக வடக்கில் அதனை பயன்படுத்துகின்றனர்.

குடும்ப அட்டை நடைமுறை தொடர்பில் விளக்கம் அளிக்குமாறு சில பிரதேச செயலகங்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ் பிராந்திய அலுவலகம் சார்பில் கடிதம் அனுப்பினோம்.

எமக்கு பிரதேச செயலகளால் கிடைக்கப்பெற்ற பதில்களின் அடிப்படையில் குடும்ப விவகாரம் தொடர்பில் பிரதேச செயலகங்களுக்கு இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆகவே வடக்கு மாகாணத்தில் குடும்ப அட்டை நடைமுறையில் இருந்தாலும் அதனை கட்டாயமாக வழங்க வேண்டும் அல்லது அதில் உள்ள விடயங்களை காரணமாக குறிப்பிட்டு சட்ட ரீதியாக அணுக முடியாது-என்றார். (அ)

# சீரற்ற காலநிலையால் கால்நடைகளை இழந்தவர்களை பதியுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 14

சீரற்ற காலநிலையால் உயிரிழந்த கால்நடைகள் குறித்தான பதிவுகள் யாழ். உடுவில் அரச கால்நடை வைத்திய நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே கால்நடை பண்ணையாளர்கள் சீரற்ற காலநிலையால் மாடு ஆடு மற்றும் கோழிகள் உயிரிழந்திருப்பின் இது குறித்தான விபரங்களை உடுவில் அரச கால்நடை வைத்திய நிலையத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குஷானுக்கு பிணை

கொழும்பு, டிசெ. 14

ஓமானுக்கு பெண்களை கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் ஈ.குஷானுக்கு பிணை வழங்கி கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 29ஆம் திகதி அதிகாலை ஓமான் தலைநகர் மஸ்கட் நகரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போதே ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் கைது செய்யப்பட்டார். (அ)

# நிலைமாறு கால நீதி வழிமுறைகள்:

## எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை

மிராக் ரஹீம்



(நேற்றைய தொடர்ச்சி...)

பல்வேறு சமூகங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் வரலாற்று ரீதியான மனக் குறைகள் மற்றும் திட்டவட்டமான அத்துமீறல்கள் என்பன குறித்துப் பேசினார்கள்: உள்நாட்டுப் போரின் இறுதி மாதங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள், 1980 இன் பிற்பகுதிகளில் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சி, போர் இடம்பெற்ற காலப் பிரிவின் போது எல்லைக் கிராமங்கள், அகதிகள், ஊடக வியலாளர்கள், மாற்றுப் பாலீர்ப்பாளர் சமூகத்தினர் மற்றும் பெண்கள் குழுக்கள் போன்ற விடயங்களும் உண்மையை கண்டறியும் பொறிமுறையில் உள்ளடக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

பல்வேறு ஆயுதக் குழுக்களைச் சேர்ந்த போராளிகள், கலந்தாலோசனையில் 'பாதிக்கப்பட்டவர்கள்' தொடர்பாக உயர் அளவில் கவனஞ் செலுத்தப் பட்டிருந்தமை குறித்து எதிர்வினையாற்றியிருந்தார்கள். ஒரு இராணுவ உத்தியோகத்தர் இது "பெருமளவுக்கு பாதிக்கப்பட்டவர்களை மையமாக கொண்டுள்ளது. அது அவ்வாறிருத்தல் வேண்டும், ஆனால், எம்மைப் பற்றி ஒன்றுமில்லையே?" எனக் கேட்டார்.

தனிநபர் படுகொலைகளையும் உள்ளடக்கிய விதத்தில் திட்டவட்டமான சம்பவங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என ஒரு சில சமர்ப்பணங்களில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், மற்றும் சில சமர்ப்பணங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சிறுவர் ஆட்சேர்ப்பு போன்ற திட்டவட்டமான அத்துமீறல் வகைகள் குறித்து கண்டறியப்பட வேண்டும் என யோசனை தெரிவித்திருந்தன. அதே வேளையில், வேறு சில சமர்ப்பணங்கள் மலையகத் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்று வரும் கட்டமைப்பு ரீதியான வன்முறை மற்றும் பாரபட்சம் போன்ற செயல்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தன.

ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை வடிவமைக்க விரும்பும வர்கள், அத்தகைய ஒரு பொறிமுறையுடன் சம்பந்தப்படாத விதத்தில் உண்மையை கண்டறிவதற்கான கோரிக்கை இருந்து வருகின்றது என்ற தடுமாற்ற நிலையை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.



உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான விமர்சனங்களை அலட்சியம் செய்வதற்குப் பதிலாக, அந்த விடயங்களை கவனத்தில் எடுப்பதற்கு அவர்கள் முயற்சிக்க வேண்டும். குறிப்பாக (நான் பணியாற்றிய காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தையும் உள்ளடக்கிய விதத்தில்) இதுவரையில் உண்மைய பெற்றுக்கொடுக்க முடியாதிருக்கும் நிலையும், கடந்த தசாப்தங்களின் போது அரசினால் சேகரிக்கப்பட்டிருக்கும் பெருந்தொகையான சான்றுகள் மற்றும் ஆவணங்கள் என்பனவும், ஏற்கனவே அரசு வசம் இருந்து வரும் தகவல்களை ஒன்றாக தொகுப்பதற்குப் பதிலாக, மற்றொரு ஆணைக்குழுவுக் கூடாக பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தகவல்கள் கேசரிக்கப்பட வேண்டுமா என்ற பாராதூரமான கேள்வி எழுகின்றது.

ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான திட்டவட்டமான சட்டவாக்கம், விசாரணை ஆணைக்குழுக்களிடமிருந்து கணிசமான அளவில் வேறுபட்டதாக இருந்து வர முடியும். எனினும், விசாரணை ஆணைக்குழுக்கள் எவ்வாறு செயற்பட்டு வந்துள்ளன, அவை எதிர் கொண்ட இடையூறுகள் எவை என்பன குறித்த கவனமான ஓர் ஆய்வு, தகவல்களை சேகரிப்பதிலும், விசாரணைகளை நடத்துவதிலும் நிலவி வரும் திட்டவட்டமான இடைவெளிகளை எடுத்துக் காட்ட முடியும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு சட்டத்தை தயாரிப்பவர்கள் அந்த இடைவெளிகளை கவனத்தில் எடுப்பது அவசியமாகும். அந்த விதத்தில் குறிப்பாக விசாரணை நடத்தும் அதிகாரம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு இணையான விதத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அதன் பரிந்துரைகளை அமுல் செய்வதற்கான திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் செயன்முறையின் ஒட்டு மொத்த வடிவமைப்பை நோக்கும் போது அது குறித்து ஆழமாக சிந்தித்து, திட்டங்களை உருவாக்க வேண்டியுள்ளது என்ற விடயத்தை அறிய முடிகின்றது. முன்னைய விசாரணை ஆணைக் குழுக்களின் அனுபவத்திலிருந்து கிடைக்கும் முக்கியமான ஒரு பாடம், பாதிக்கப்பட்டவர்களினால் வழங்கப்பட்டிருக்கும் சான்று முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றின் பலம் என்னவாக இருந்த போதிலும், அவற்றை அமுல் செய்வதற்கான அரசியல் விருப்பு குறைவாக இருந்து வருகின்றது என்பதாகும்.

எனவே, தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார கொந்தளிப்புச் சூழ் நிலையில், ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது தவிர அரசாங்கம் உண்மையில் வேறு சில விடயங்கள் தொடர்பாகவும் தன்னை அரப்பணித்துக் கொண்டுள்ளது. இந்தப் பின்னணியில், அவ்விதம் அமைக்கப் படும் ஆணைக்குழு இறுதியில் அதனை உருவாக்கிய அரசாங்கத்திடம் தனது கருத்துக்களை முன் வைப்பதற்கு போராட வேண்டி நேரிட முடியும்.

### கலந்தாலோசனைகளின் குறியீட்டு ரீதியான மதிப்பு மற்றும் உண்மையான மதிப்பு

எனவே, யாருக்காக இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்படுகின்றது? வெறுமனே சர்வதேச அழுத்தங்களை சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் அவை உருவாக்கப்படுவதாக இருந்தால் அத்தகைய ஆணைக் குழுக்களை ஸ்தாபிப்பது அவ்வளவு சிரமமான காரியமாக இருக்க மாட்டாது: ஏனைய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களின் அம்சங்களை இரவல் வாங்கி, ஒரு பிரேரணையை தயாரிக்கும் பணியை சட்டத்தரணிகளை குழுவொன்றிடம் ஒப்படைக்க முடியும். உள்நாட்டு சட்ட நடைமுறைகளுடன் இணைந்த விதத்தில் அவர்கள் அந்த பிரேரணையை தயாரித்து, அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியும். அதனையடுத்து அரசுக்கு விசுவாசமான தனிநபர்களின் குழு ஒன்றை நியமனம் செய்ய முடியும்.

எவ்வாறிருப்பினும், இது கடந்த காலத் தவறுகள் மற்றும் தோல்விகள் என்பவற்றை மீண்டும் எடுத்து வருவதற்கான ஒரு வகை மாதிரியாகவே இருந்து வரும். எனினும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைப்பதன் அபிலாசை விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பான இலங்கைக்கு மீண்டும் மீண்டும் நிகழ்த்திய பரீட்சார்த்தங்களிலிருந்து கற்றுக் கொள்வதும், பெருமளவுக்கு நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுடைய பிரச்சினைகளுக்கு எதிர்வினையாற்றுவதும், வேதனை மிகுந்த கடந்த காலத்தை சமாளிக்கக்கூடிய ஒரு செயன்முறையை உருவாக்குவதும்.

நியாயமான ஒரு நாட்டை கட்டியெழுப்பும் பொருட்டு இவற்றை தீர்த்து வைப்பதற்கான வழிமுறைகளுக்கு தன்னை அப்பணித்துக் கொள்வதும் இதன் அபிலாசையாக இருந்து வந்தால் அதற்கு வேறுபட்ட ஒரு பாதையே தேவைப்படுகின்றது.

இத்தகைய ஆணைக்குழு ஒன்றை வடிவமைக்கும் செயன்முறை பொது மக்கள் - குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் - அந்தப் பொறிமுறையை அணுகி, அதனுடன் எவ்வாறு செயற்படுவார்கள் என்ற விடயத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும். இது தொடர்பாக கலந்தாலோசனை அனுகுமுறை ஒன்றை உறுதிப்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாகும்.

அவ்வாறு செய்வது எதிர்கால உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவொன்றுக்கு குறியீட்டு ரீதியான மதிப்பினையும், அசல் மதிப்பினையும் வழங்க முடியும். கலந்தாலோசனைச் செயலணி அறிக்கைகள் பாதிக்கப்பட்ட சமூகங்களின் அனுபவங்களின் அடிப்படையில் முக்கியமான கண்ணோட்டங்கள் மற்றும் திட்டவட்டமான யோசனைகள் என்பவற்றை வழங்கும் அதே வேளையில், இந்தக் கலந்தாலோசனைகள் இடம்பெற்று நீண்ட ஆறு ஆண்டுகள் கடந்து சென்றுள்ளன என்ற விடயத்தையும் நினைவுபடுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

ஒரு சில நிலைமாறு கால நீதி வழி முறைகள் அமுல் செய்யப்பட்ட போதிலும், அவை பொது மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வைக்கவில்லை. குறிப்பாக காணாமலாக்கப் பட்டவர்களுக்கு நேர்ந்த கதி தொடர்பாக மக்களுடைய எதிர்பார்ப்புக்களை அவை நிறைவேற்றி வைக்கவில்லை. குறிப்பாக நீதி தொடர்பான கடப்பாடுகளை பொறுத்த வரையில் கணிசமான அளவிலான குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை. குறியீட்டு ரீதியான சம்பவங்கள் தொடர்பாக எத்தகைய முக்கியமான வெற்றிகளை ஈட்டத் தவறியிருப்பது, உள்நாட்டு முறைகளுக்கு ஊடாக நீதியை பெற்றுக் கொள்ள முடியும் என்ற விடயத்தில் பொதுமக்களின் நம்பிக்கையை சீர்குலைத்துள்ளது.

உண்மை மற்றும் நல்லிக்கண ஆணைக்குழு குறித்த கருதுகோள் 2016ஆம் ஆண்டில் ஒரு நீதிப் பொறிமுறையையும் உள்ளடக்கிய விதத்தில் நான்கு பொறிமுறைகளில் ஒன்றாக முன்வைக்கப்பட்டிருந்தது. ஒரு நீதிப் பொறிமுறை இல்லாத உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, சர்வதேச சமூகம் மற்றும் இலங்கையின் பொது மக்கள் ஆகிய தரப்புக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கான இலங்கை அரசின் முயற்சிகளின் ஒரு பாகமாகவே நோக்கப்படுகின்றது.

இந்த உத்தேசப் பொறிமுறை சட்ட பூர்வத் தன்மை, நம்பகத் தன்மை மற்றும் பொது மக்களின் நம்பிக்கை என்பவற்றை வெல்ல வேண்டுமானால் கலந்தாலோசனை மிக முக்கியமானதாகும். எவ்வாறிருப்பினும், கலந்தாலோசனைகள் வெறுமனே கண்துடைப்பு இயல்பிலான கலந்தாலோசனைகளாக இருந்து வரக் கூடாது. அவை கொழும்பு சிவில் சமூக ஆளுமைகளுடன் மட்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் நாடெங்கிலும் வாழ்ந்து வரும் சமூகத் தலைவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கலந்தாலோசனைகள் ஓர் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு தேவை தானா என்ற கேள்விகளையும் உள்ளடக்கிய விதத்தில் கடினமான கேள்விகளை கவனத்தில் எடுப்பது அவசியமாகும். ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான தேவை தெளிவாக இருந்து வருகின்றது என அனுமானிப்பதற்குப் பதிலாக, உண்மையை கண்டறியும் விடயத்தில் ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு வகிக்கக்கூடிய வகிபங்கினை மதிப்பிடுவதும், உண்மையை கண்டறியும் பாரிய செயன்முறைக்கு உதவுவதற்கென புறம்பாக எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் அதற்கு இணையான விதத்தில் எடுப்பட வேண்டிய வழிமுறைகள் மதிப்பிடுவதும் புத்திசாலித்தனமானதாக இருந்து வரும்.

(கட்டுரையாளர்: நல்லிணக்கப் பொறிமுறைகள் குறித்த கலந்தாலோசனை செயலணியின் (2016) ஓர் உறுப்பினராகவும், காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் ஓர் ஆணையாளராகவும் (2018 -2021) இருந்து வந்துள்ளார்.)

# கடந்த காலத்தில் இருந்து விடுபட்டு

# புதிய வழியில் பிரச்னைகளை கையாள ஒரு வாய்ப்பு

**நாடு ஒன்றுபட்டுச் செயற்படாவிட்டால் எதிர்காலம் என்று ஒன்று இருக்க முடியாது. தற்போதைய நெருக்கடியை நாடு கையாள ஒன்று படுவதற்கு அரசியல் தீர்வு அடிப்படை என்று தோன்றுகிறது.**



**கலாநிதி ஜெகான் பெரேரா**

2023 பட்ஜெட் கணிசமான பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேறியமை பாதகமான சூழ்நிலைக்கு மத்தியிலும் அரசாங்கத்தின் பாராளுமன்ற பெரும்பான்மை உறுதியாக இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது. ஆளும் கட்சி இருபதுக்கும் அதிகமான அதன் உறுப்பினர்களை இழந்துவிட்டது. அவர்கள் இப்போது கட்சியின் நிலைப்பாடுகளை பினாபற்றுவதில்லை. ஏனைய உறுப்பினர்கள், தெளிவான தலைமைத்துவம் இல்லாவிட்டாலும் கூட ஒன்றிணைந்து நிற்கிறார்கள் போன்று தெரிகிறது.

பிரிந்துசென்ற குழுக்களில் ஒன்றுக்கு தலைமைதாங்கும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆளும் கட்சி உறுப்பினர்களை கடுமையாக கண்டனம் செய்தார். எந்த ஆணை மீது கடந்த பாராளுமன்ற தேர்தலில் அந்த உறுப்பினர்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டார்களோ அந்த ஆணைக்கு அவர்கள் துரோகமிழைத்துவிட்டதாக அவர் கூறினார்.

அரசுக்கு சொந்தமான பொருளாதார நிறுவனங்கள் உட்பட அரச சொத்துக்களை பாதுகாப்பதாக முன்னைய தேர்தல்களின்போது சிறிலங்கா பொதுஜன பெரமுன மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

பொதுஜன பெரமுன கடந்த தேர்தல்களில் முன்வைத்த சொந்த விஞ்ஞாபனங்களை கைவிட்டு இப்போது விசுவாசத்தை ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு காட்டுவதாக பேராசிரியர் பாராளுமன்றத்தில் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய உரையில் குற்றஞ்சாட்டினார்.

2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலிலும் 2020 பாராளுன்ற தேர்தலிலும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை மேலும் அபிவிருத்தி செய்து நவீனமயப்படுத்துவதாக வாக்காளர்களுக்கு திரும்பத்திரும்ப உறுதியளித்த பொதுஜன பெரமுன, நிதியமைச்சர் என்ற வகையில், இலாபத்தில் இயங்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களைக் கூட விற்றுவிடுவதற்கு திடசங்கல்பம் பூண்டிருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குகிறது என்று பேராசிரியர் சுட்டிக்காட்டினார். சிறிலங்கா இன்சூரன்ஸ் மற்றும் சிறிலங்கா ரெலிகோம் உட்பட பல அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது குறித்து ஜனாதிபதி யோசனைகளை முன்வைத்திருக்கிறார்.

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்துவதற்கு பாதை திறந்துவிடப்படுகின்றது என்பதை அரசாங்கத்தின் பட்ஜெட் யோசனைகள் தெளிவாகக் காட்டுகின்றன. அந்த நிறுவனங்களை பாதுகாக்கவேண்டும் என்று முன்னர் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களது நிலைப்பாட்டை மாற்ற வேண்டிய தேவை குறித்து இப்போது விளக்கமளித்துக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கை அதன் சொத்துக்களில் சிலவற்றை விற்பனை செய்வதன் மூலமாக வெளிநாட்டு செலாவணிக் கையிருப்பை அதிகரிக்காவிட்டால் சர்வதேச வாணிப முறைமையின் ஒரு அங்கமாக இருக்கமாட்டாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். வெளிநாட்டு நாணயக் கையிருப்பை 300 கோடி டொலர்களுக்கும் அதிகமாக அதிகரிக்காவிட்டால் இலங்கையின் வங்கிகளினால் வழங்கப்படும் கடன் பத்திரங்களை சர்வதேச கம்பனிகள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

### திடீர் மாற்றம்

ஆளும் கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தின் பின்னால் உள்ள உண்மையான அரசியல் நடைமுறைச்சாத்தியமான இலக்குகளை அடிப்படையாக கொண்ட அரசியலாகும். இங்கு இலட்சியங்களை விடவும் தப்பிப்பிழைப்பதே நோக்கமாகும். ஒரு வருடத்துக்கு முன்னர் நாட்டை உலுக்கிய பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து மூண்ட போராட்ட இயக்கம் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் செயலகங்களையும் உத்தியோகபூர்வ வாசஸ் தலங்களையும் முற்றுகையிட்டு அதன் உச்சக்கட்டத்தை அடைந்தது.



அந்த போராட்ட இயக்கம் ஜனாதிபதியையும் பிரதமரையும் பதவிவிலக வைத்து மக்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய நம்பகமான எந்த தலைமைத்துவத்தையும் ஆளும் கட்சிக்கு இல்லாமலாக்கியது. இத்தகைய பின்புலத்தில்தான் தனது கட்சியின் தனியொரு உறுப்பினராக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த - ஐந்து தடவைகள் பிரதமாக இருந்த - விக்கிரமசிங்க சவாலை ஏற்று ஆளும் கட்சிக்கு தனது தலைமைத்துவத்தை வழங்க முன்வந்தார்.

போராட்ட இயக்கத்தை படைபலத்தை பயன்படுத்தி ஒடுக்கியமை, அரசாங்கத்தின் அண்மைய வரிக்கொள்கை மற்றும் ஊழல் தொடர்பில் உறுதியான கொள்கையின்மை என்று ஜனாதிபதி விக்கரமசிங்கவின் சில நடவடிக்கைகள் கடுமையான கண்டனத்துக்குள்ளாகியிருக்கின்றன. ஆனால் ஜனாதிபதி அரசாங்கத்தின் கடிவாளத்தை தனது கையில் எடுத்த பிறகு போராட்ட இயக்கத்துக்கான ஆதரவு வெகுவாக குறைந்து போனதுடன் ஆர்பாட்டங்களில் ஈடுபட வெளியில் வருபவர்களின் எண்ணிக்கையும் குறைந்தது.



கடுமையான பொருளாதார இடர்பாடுகள் தங்களது நுகர்வையும் சேமிப்புகளையும் பெருமளவில் குறைத்துக் கொள்ள மக்களை நிர்ப்பந்திக்கிறது. குறைந்தபட்சம் தற்போதைக்காவது மக்கள் இடர்பாடுகளை மௌனமாக பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள். கைத்தொழில் பகுதிகளில் ஆங்காங்கே சிறிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அவை பலமிக்க போராட்ட இயக்கமாக மாறுவதற்கான அறிகுறிகளை இன்னமும் காணவில்லை.

விரைவில் பொருளாதார மீட்சி பற்றிய நம்பிக்கையும் பாதுகாப்பு படைகள் பற்றிய பயமும் பெரும் எடுப்பிலான இன்னொரு சுற்று போராட்டத்துக்கு தயங்கும் மக்களின் விருப்புகளை தொடர்ந்து அடக்கிக்கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும், போராட்ட இயக்கம் உச்சக்கட்டத்தில் இருந்த போது மக்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் இருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் இப்போது கூட மக்களுக்கு பயந்தவர்களாகவே இருக்கிறார்கள். தாங்கள் கடந்த காலத்தில் கடைப்பிடித்த அடிப்படை நிலைப்பாடுகளுக்கு எதிராக தற்போது செயற்பட வேண்டியிருந்தாலும் கூட ஒன்றிணைந்து நிற்பதற்கு அவர்கள் விரும்புகிறார்கள் போன்று தெரிகிறது.

வடக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களின் படங்கள் ஒட்டப்பட்டிருந்த விளம்பர பலகை ஒன்றின் மீது அழுகிய தக்காளிப் பழங்களை பெண்கள் வீசுவதை காண்பிக்கும் பதிவுகளை பார்க்கக்கூடியதாக இருந்தது. அத்தகைய தென்பகுதியிலும் இருக்கும். தங்களது நிலைப்பாடுகளில் ஏற்பட்ட மாற்றத்தை நியாயப்படுத்திய அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன, 'நாடுகளின் கடனை திருப்பிச்செலுத்தும் ஆற்றல் பற்றி மதிப்பிடும் சர்வதேச நிறுவனமான ஃபிற்ச் இலங்கையை மீண்டும் தரம் குறைத்திருக்கிறது. இலங்கையை யார் ஆட்சி செய்தாலும் அவர்கள் அதே பிரச்சினையை எதிர்கொள்வார்கள். நாம் எமது வெளிநாட்டு நாணய கையிருப்பதை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்" என்று கூறினார்.

### முன்கூட்டியே தயாரான தீர்வு

இத்தகைய இடர்மிக்க சூழ்நிலை யில், ஜனாதிபதி விக்கிரமசிங்க தாமத மின்றி நாட்டின் இனநெருக்கடிக்கு தீர் வைக்கண்டு தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டுவரும் தனது நோக்கத்தை அறிவித்திருக்கிறார்.

இதற்கு அவர் இலங்கை அதன் 75 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடப் போகும் அடுத்தவருடம் பெப்ரவரி 4 ஆம் திகதியை இலக்காக தெரிவுசெய்திருக்கிறார். இது சாத்திய மற்ற ஒரு கனவு என்று நிராகரிக்கப் படக்கூடும்.

இனநெருக்கடி என்பது பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நீடித்துவருகின்ற ஒன்றாகும். இந்த நெருக்கடி சுதந்திரத்துக்கு வெகு முன்னதாகவே காலனித்துவ ஆட்சியாளர்களினால் அடையாளம் காணப்பட்டதாகும். இலங்கையின் தலைவர்கள் சிலரால் முன்வைக்கப்பட்ட சுயாட்சிக்கான கோரிக்கைக்கு பதிலளித்த காலனித்துவ ஆட்சியாளர்கள், 'இலங்கையில் வாழ்பவர்கள் ஐக்கியம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வை பெருமளவுக்கு வெளிக்காட்டியிருந்தால் முழுமையான பொறுப்புவாய்ந்த அரசாங்கத்தை அவர்களிடம் கையளிப்பதற்கு இருக்கக்கூடிய தடை நீங்கியிருக்கும்" என்று குறிப்பிட்டனர்.

பிரிட்டிஷ் காலனித்துவ வாதிகளினால் அடையாளம் காணப்பட்ட இலங்கைச் சமூகத்தின் பிளவுபட்ட தன்மையை இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

1957 பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த 1965 டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தையும் நடைமுறைப் படுத்த முடியவில்லை. 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை ஓரளவுக்கு மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டது. 2000 சந்திரிகா குமாரதுங்கவின் அரசியலமைப்பு வரைவு பாராளுமன்றத்தில் எரிக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் 2010 சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனைகளை அரசாங்கம் பரிசீலனைக்குக் கூட எடுக்கவில்லை. சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்க காலத்தில் 2015 அரசியலமைப்புச்சபை பல்வேறு யோசனைகளை முன்வைத்தது.

மறு வார்த்தைகளில் கூறுவதானால், இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு பல தடவைகள் தயாரிக்கப்பட்டன. அந்த தீர்வுகள் அந்தந்த காலகட்டங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்களினால் அல்லது அவற்றில் இருந்த சில பிரிவினரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலையும் இருந்தது. ஆனால் எதிரணியினால் நிராகரிக்கப்பட்டன.


இத்தடவை இலங்கையின் வரலாற்றிலேயே மிகவும் தீவிரமான இராணுவவாத - இனத்துவ தேசியவாத கட்சி என்று அடையாளப்படுத்தக்கூடிய பொதுஜன பெரமுன அதன் குறுகியகால 'உயிர்வாழ்வுக்காக" இனவாதமற்ற ஒரு அரசியல் தலைவர் மீது தங்கியிருக்கிறது. இது மீண்டும் வரமுடியாத ஒரு வாய்ப்பாகும். இதை பயன்படுத்தவேண்டியது அவசியம்.

அடுத்த சுதந்திர தினம் அளவில் இனநெருக்கடிக்கு தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க செய்யும் அறிவிப்பு பட்ஜெட்டை நிறைவேற்றியதில் காட்டிய செயற்திறமையை இன நெருக்கடிக்கான அரசியல் தீர்விலும் காட்டமுடியும் என்ற அவரது நம்பிக்கையை பிரதிபலிப்பதாக இருக்கலாம். அந்த தீர்வுக்கான உருவரைபுகள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

நாடு ஒன்றுபட்டுச் செயற்படாவிட்டால் எதிர்காலம் என்று ஒன்று இருக்க முடியாது. தற்போதைய நெருக்கடியை நாடு கையாள ஒன்றுபடுவதற்கு அரசியல் தீர்வு அடிப்படை என்று தோன்றுகிறது.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ...............................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ...............................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

.........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.....................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.....................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 1l 100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 14.12.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 14.12.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கல்முனை பஸ் நிலைய சர்ச்சைக்கு தீர்வு வந்தது

அம்பாறை, டிசெ. 14

கல்முனை பஸ் நிலையத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களையும் தனியார் பஸ்களையும் தரிக்கச் செய்வதில் இரு தரப்பினரிடையே நிலவி வந்த சர்ச்சை, மாநகர மேயரால் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டது.

பஸ் நிலையத்துக்கு கள விஜயம் மேற்கொண்ட மாநகர மேயர் ஏ.எம் றகீப், இரு தரப்பினரதும் கோரிக்கைகளை உள்வாங்கி, எவருக்கும் பாதகமில்லாத வகையில் இட ஒதுக்கீடுகளை மேற்கொண்டார். இதன் பிரகாரம், இரு பிரிவு பஸ்களையும் நிறுத்துவதற்கான இடங்கள், வெள்ளைக் கோட்டால் அடையாளமிடப்பட்டன.

இதன்போது, ஓட்டோ ஓட்டுநர்களுக்கும் பஸ் நிலையத்தின் ஒரு பகுதியில் இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்களப்பணியில் மேயருடன் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம் அமீர், மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி. உதயகுமரன், வருமான பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். (அ)

# பொலிஸார் குற்றம் செய்தாலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

அம்பாறை, டிசெ. 14

பொலிஸ்துறை சார்ந்தோர் குற்றம்செய்தாலும் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால், எவ்வித தயவுதாட்சண்யமின்றி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.றம்சீன் பக்கீர் தெரிவித்தார்.

கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களின் கலந்துரையாடல், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். றம்சீன் பக்கீர் தலைமையில் கல்முனை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய எம்.றம்ஸீன் பக்கீர் மேலும் கூறியதாவது

நாட்டின் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக நாமனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் குற்றச்செயல்களை செய்வதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது. தற்போது கல்முனை பிரதேசத்தில் குற்றச்செயல்கள் குறைவடைந்தாலும், இன்னும் குற்றச்செயல்களுடன் தொடர்புடையோர் இருந்து கொண்டே இருக்கின்றனர். எனவே சமூகத்திலுள்ள நாமனைவரும் இணைந்து, குற்றச்செயல்களை ஒழிப்பதற்கு முயல வேண்டும்- என்றார். (அ)

# வெல்லாவெளிக்கு வந்த தொல்லியல் அதிகாரிகள்

மட்டக்களப்பு, டிசெ. 14

மட்டக்களப்பு, போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில், ஏற்கெனவே அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் எல்லைக் கற்கள் இடுவதற்காக நேற்று முன் தினம் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் விஜயம் செய்திருந்தனர்.

இதனை அறிந்த மக்கள், அந்தந்த இடங்களில் ஒன்று கூடி நின்றனர். அத்தோடு, வெல்லாவெளி கல்லடிப் பிள்ளையார் ஆலயத்தில் மாபெரும் சிரமதானப் பணியையும் அன்னதான நிகழ்வையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

தமது நடவடிக்கைகளுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாக அறிந்த தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்குள் சென்று பிரதேச செயலாளருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதையறிந்த மக்கள் பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் உள்ளிட்ட பலர் பிரதேச செயலகத்துக்குச் சென்று பிரதேச செயலாளருடனும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளிடமும் கலந்துரையாடினர்.

இவ்விடயம் தொடர்பில், கிராமமட்ட அமைப்புகளுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் தைப் பொங்கல் தினத்துக்குப் பின்னர் ஒரு நாளில் கலந்துரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# இன்று ஆறுமுக நாவலர் குருபூஜை

அம்பாறை, டிசெ. 14

ஈழத்தில் சைவமும் தமிழும் வளர்த்த நல்லை நகர் ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூஜை இன்று புதன்கிழமை ஆகும்.

அதனை முன்னிட்டு இன்று அம்பாறை பெரிய நீலாவணை விஷ்ணு ஆலயத்தில் அந்தர் யாகம் சைவப் பிராமணர்களால் நடத்தப்படவுள்ளது.

இந்து சமய கலாசார அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளார்.

இதேவேளை, ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த புத்தக கண்காட்சியும், விற்பனையும் காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

முதல் நாள் மட்டும் , சுமார் இரண்டு லட்சம் வரை அமோக விற்பனை இடம்பெற்றது. இவ் விற்பனைக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி எழில்வாணி பத்மகுமார் பொறுப்பாளராக செயற்பட்டார்.

நேற்றும் பாடசாலை மாணவர்கள் சகிதம் விற்பனை அமோகமாக நடைபெற்றது.

இந்த நான்கு நாள் கண்காட்சி மற்றும் விற்பனை இன்று புதன்கிழமை மாலை 5 மணி வரை நடைபெற்று நிறைவடையவுள்ளது. (அ)

# கல்முனை வைத்தியசாலையில் சிறப்பாக நடைபெற்ற ஒளிவிழா!

அம்பாறை, டிசெ. 14

கல்முனை ஆதார வைத்தியசாலையின் ஒளி விழா நிகழ்வானது நேற்று வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் வைத்தியசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் கிறீஸ் நவரெட்ணராஜா பிரதம அதிதியாகவும், கல்முனை எய்ம் தேவாலய அருட்தந்தை. ரமேஷ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.



இதன் போது சிறுவர்களுக்கான நிகழ்வுகளில் நத்தார் தாத்தா கலந்து சிறப்பித்தார்.

இங்கு வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

அத்துடன் ஒவ்வொரு விடுதிகளுக்கும் நத்தார் தாத்தா சென்று சிறுவர்களையும் நோயாளர்களை மகிழ்வூட்டியதுடன் பரிசுப் பொருட்களையும் வழங்கினார். (அ)

# இந்து கலாசார திணைக்களத்தின் புத்தகக் கண்காட்சி காரைதீவில்

அம்பாறை, டிசெ. 14

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் மாபெரும் புத்தகக் கண்காட்சியையும் நூல் விற்பனையையும் காரைதீவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக ஆரம்பமானது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவு சுவாமி விபுலானந்த மணி மண்டபத்தில் இந்த புத்தக கண்காட்சியும் விற்பனையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் இன்று புதன்கிழமை வரை இடம்பெற இருக்கிறது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை புத்தகக்கண்காட்சி அங்குரார்ப்பண வைபவம் இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், திருமுன்னிலை அதிதியாக மட்.இராமகிருஷ்ண மிஷன் குருகுல உதவி முகாமையாளர் ஸ்ரீ மத் சுவாமி சுரர்சிதானாந்தா ஜீ மகராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் அழைப்பு விடுத்திருந்த இந் நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், உதவி பிரதேச செயலாளர்களான பி.பார்த்தீபன் (காரைதீவு) ச.சதிசேகரன்( திருக்கோவில்) ரி.சுபாகரன் (ஆலையடிவேம்பு) மற்றும் வலயக்கல்வி பிரதி உதவி கல்வி பணிப்பாளர்கள், உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக அதிதிகள் வரவேற்கப்பட்டு சுவாமிகளின் இல்லத்தில் விஷேட பூசை மற்றும் சுவாமியின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அதிதிகள் புத்தக கண்காட்சியை பார்வையிட்டனர். (அ)

# கஜ முத்துக்கள் கடத்திய நபர்களிடம் விசாரணை

அம்பாறை, டிசெ. 14

5 கஜமுத்துக்களை ஓட்டோ ஒன்றில் கடத்தி சென்று கைதான 3 சந்தேக நபர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மகா ஓயா இலங்கை வங்கிக்கு அருகில் வைத்து 3 சந்தேக நபர்கள் 5 கஜமுத்துடன் திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

மேலும் கைதானவர்கள் பிபிலை பண்டாரவளை பகுதியை சேர்ந்தவர்கள் என்பதுடன் பிபிலையில் இருந்து மகா ஓயாவிற்கு கஜமுத்துக்களை வியாபாரத்துக்காக ஓட்டோவில் கடத்திச் சென்ற நிலையில் விசேட அதிரடிப்படையினர் இடைமறித்துச் சோதனை மேற்கொண்டு கைது செய்தனர்.



அத்துடன் கைது செய்யப்பட்டவர்கள் 53, 34 , 36 வயதுடையவர்களாவர். மீட்கப்பட்ட கஜமுத்துக்கள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய முச்சக்கரவண்டி ஆகியன மகா ஓயா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தவிர கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# நிலவிலிருந்து பூமி திரும்பியது நாசா அனுப்பிய ஆய்வுக் கலம்

நியூயோர்க், டிசெ. 14

நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்புவதற்கு முன்னோடியாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசா கடந்த மாதம் அனுப்பிய ஆய்வுக் கலம், வெற்றிகரமாக மீண்டும் பூமிக்குத் திரும்பியது.

மெக்ஸிக்கோவுக்கு அருகே பசிபிக் கடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இறங்கிய அந்த விண்கலம், ஒலியின் வேகத்தைப் போல் 32 மடங்கு வேகத்தில் வளிமண்டலுக்குள் நுழைந்து, 5,000 பாகை வெப்பத்தை ஏற்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பலோ விண்கலத் திட்டங்கள் நிறுத்தப்பட்ட 50 ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் முறையாக நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதற்காக 'ஆர்டமிஸ்-1' என்ற இந்த திட்டத்தை நாசா உருவாக்கியுள்ளது. அதற்கு முன்னோட்டமாக, சோதனை முறையில் 3 மனித மாதிரிகளுடன் அந்த ஆய்வுக் கலம் கடந்த மாதம் ஏவப்பட்டது. அதற்கு முன்னர் இயந்திரக் கோளாறு காரணமாக அந்தத் திட்டம் பலமுறை ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# ஹைபர்சொனிக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்தது அமெ.



நியூயோர்க், டிசெ. 14

சீனா மற்றும் ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட அதிநவீன மூலோபாய ஆயுதமான ஹைப்பர்சோனிக் ஏவுகணையை, தானும் வெற்றிகரமாக சோதித்ததாக அமெரிக்க விமானப் படை அறிவித்தது.

ஏ.ஜி.எம். -183 ஏ ஏர்-லோஞ்சட் ரேபிட் ரெஸ் பொன்ஸ் கலிபோர்னியாவின் கடற்கரையில் வெள்ளிக்கிழமை பி-52 எச் குண்டுவீச்சிலிருந்து ஏவப்பட்டது.

"ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு அதிகமான ஹைப்பர்சோனிக் வேகத்தை அடைந்தது, அதன் பறக்கும் பாதையை முடித்து முனையப் பகுதியில் வெடித்தது. ," என்று விமானப்படை கூறியது.

"இந்த சோதனை ஒரு முழு முன்மாதிரி செயல்பாட்டு ஏவுகணையின் முதல் ஏவுகணையாகும்," என்று அது மேலும் கூறியது.

அமெரிக்கா பல ஹைப்பர்சோனிக் ஆயுத திட்டங்களைக் கொண்டுள்ளது. பென்டகனின் உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பு இந்த ஆண்டின் தொடக்கத்தில் வேறு ஏவுகணையை சோதித்தது.

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் உலகளாவிய இராணுவ சமநிலைக்கு ஒரு சாத்தியமான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன, அணு ஆயுதங்களை துல்லியமாக இலக்கில், இடைமறிக்க முடியாத வேகத்தில் அனுப்பும் திறன் கொண்டவை.

சீனா கடந்த ஆண்டு ஹைப்பர்சோனிக் ஏவுகணை சோதனையை நடத்தியது. இந்த வகை ஆயுதத்தை உருவாக்கியதாக ரஷ்யா முதலில் அறிவித்தது. உக்ரைனில் நடந்த போரின் போது ஹைப்பர்சோனிக் ஆயுதங்களைப் பயன்படுத்தி சோதனை செய்திருந்தது. ஹைப்பர்சோனிக் ஏவுகணை சோதனை நடத்தியதாக வடகொரியாவும் கூறுகிறது.

அமெரிக்கா தனது 2022 ஏவுகணை பாதுகாப்பு மறுஆய்வு அறிக்கையில் ஹைப்பர்சோனிக் ஆயுதங்களால் அதிகரித்து வரும் ஆபத்தை எடுத்துரைத்தது.

"அமெரிக்க சென்சார்கள் மற்றும் தற்காப்பு அமைப்புகளைத் தவிர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஹைப்பர்சோனிக் ஆயுதங்கள், அவற்றின் இரட்டை (அணு/வழக்கமான) திறன், சவாலான விமான விவரம் மற்றும் சூழ்ச்சித் திறன் ஆகியவற்றின் காரணமாக பெருகிய முறையில் சிக்கலான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன" என்று அறிக்கை கூறியது. (அ)

# தாய்வானின் வான் பாதுகாப்பு வலயத்திற்குள் அத்துமீறிய 18 அணுசக்தி போர் விமானங்கள்!



தாய்பேய், டிசெ. 14

தாய்வானின் வான் பாதுகாப்பு வலயத்திற்குள் 18 அணுசக்தி திறன் கொண்ட எச்-6 ரக குண்டுவீச்சு விமானங்கள் அத்துமீறி நுழைந்ததாக தாய்வானின் பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது.

தாய்வானின் பாதுகாப்பு அமைச்சின் கூற்றுப்படி, தாய்வானின் தென்மேற்கு வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்திற்கு அனுப்பப்பட்ட 21 மொத்த சீனப் போர் விமானங்களில், 18 குண்டுவீச்சு விமானங்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமையை கண்காணித்து வருவதாகவும், சீன விமானங்களை கண்காணிக்க அதன் போர் விமானங்கள் மற்றும் தரை அடிப்படையிலான ஏவுகணை அமைப்புகளைப் பயன்படுத்தியதாகவும் அமைச்சு மேலும் கூறியது.

கடந்த 2020ஆம் ஆண்டு சீனப் போர் விமான ஊடுருவல் குறித்த தினசரி தரவை வெளியிடத் தொடங்கியதில் இருந்து 24 மணி நேர காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான எச்-6 ரக குண்டுவீச்சு விமானங்கள் அத்துமீறியது இதுவே முதல்முறையாகும்.

சீனாவின் ஆளும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, 24 மில்லியன் மக்கள் வசிக்கும் ஜனநாயக ரீதியில் ஆளப்படும் தாய்வானை, அதன் பிரதேசத்தின் ஒரு பகுதியாகக் கருதுகிறது. தேவைப்பட்டால் வலுக்கட்டாயமாக, சீன நிலப்பரப்புடன் தீவை இணைப்பதாகவும் அச்சுறுத்தி வருகின்றது. (அ)

## காபூலில் ஹோட்டல் மீது சூடு

# மூன்று பேர் உயிரிழப்பு 5 சீனர்கள் உட்பட பலர் காயம்



காபூல், டிசெ. 14

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஹோட்டல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போது மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2:30 மணியளவில் காபூலின் வர்த்தக ஷார்-இ-நாவ் பகுதியில் உள்ள ஹோட்டல் மீது துப்பாக்கி தாரிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதல் குறித்து தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபியுல்லா மொஜாஹிட்டின் கூறுகையில், 'மூன்று துப்பாக்கி ஏந்தியவர்களும் கொல்லப்பட்டனர் மற்றும் ஹோட்டல் விருந்தினர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்' என கூறினார்.

வெளிநாட்டு பிரஜைகள் யாரும் கொல்லப்படவில்லை, ஆனால் இரண்டு வெளிநாட்டு பிரஜைகள் கூரையில் இருந்து குதித்ததால் காயமடைந்தனர் என்று மொஜாஹிட் மேலும் கூறினார்.

சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன், காயமடைந்தவர்களில் ஐந்து சீன பிரஜைகளும் அடங்குவதாக தெரிவித்தார்.

காபூலில் உள்ள அவசரகால இலாப நோக்கற்ற நிறுவன தரவுகளின் படி, மருத்துவமனையில் 21பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக சீனாவின் அரசு நடத்தும் சின்ஹூவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது

சீன விருந்தினர் மாளிகைக்கு அருகில் தாக்குதல் நடந்ததாகவும், காபூலில் உள்ள அதன் தூதரகம் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அது மேலும் கூறியது.

இந்த மாத தொடக்கத்தில் பாகிஸ்தான் தூதரகம் மீதான தாக்குதல் மற்றும் செப்டம்பரில் ரஷ்ய தூதரகத்தின் அருகே தற்கொலை குண்டுவெடிப்பு உட்பட சமீபத்திய மாதங்களில் ஆப்கானிஸ்தானில் பல குண்டுவெடிப்புகள் நடந்துள்ளன. இந்த இரண்டு தாக்குதல்களுக்கும் இஸ்லாமிய அரசு என கூறிக்கொள்ளும் அமைப்பு உரிமை கோரியது. (அ)

# ஐரோப்பிய பாராளுமன்றத்தின் அலுவலகங்களில் சோதனை!

## லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நால்வர் கைது

பிரஸ்ஸல்ஸ், டிசெ. 14

உதைபந்து உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் கட்டாரிடம் இருந்து லஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் விசாரணையில், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிரஸ்ஸல்ஸில் உள்ள ஐரோப்பிய பாராளுமன்ற அலுவலகங்களில் பெல்ஜிய புலனாய்வாளர்கள் சோதனை நடத்தினர்.

பெல்ஜியத்தில் வெள்ளிக்கிழமை முதல் நடத்தப்பட்ட 20ஆவது தேடுதல் நடவடிக்கை இதுவாகும்.

ஜனநாயகம் தாக்குதலுக்கு உள்ளாகிறது என பாராளுமன்றத் தலைவர் ரொபர்ட்டா மெட்சோலா, ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களை எச்சரித்தார்.

இந்த விசாரணைகளின் போது, ஐரோப்பிய பாராளுமன்ற துணைத் தலைவர் ஈவா கைலி, கிரேக்க ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட நான்கு பேரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பெல்ஜிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் ஒரு குற்றவியல் அமைப்பில் பங்கேற்பது, பணமோசடி மற்றும் ஊழல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆனால், இந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து தான் எந்த தவறும் செய்யவில்லை என கட்டார் மறுத்துள்ளது. ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஊழல் குறித்து விவாதிப்பார்கள்.

சந்தேகத்திற்குரிய ஒருவரின் வீட்டில் சுமார் ஆறு இலட்சம் யூரோக்கள் மதிப்புள்ள ரொக்கமும், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரின் குடியிருப்பில் ஒரு இலட்சத்து 50ஆயிரம் யூரோக்கள் மற்றும் பிரஸ்ஸல்ஸ் ஹோட்டல் அறையில் சூட்கேஸில் பல லட்சம் யூரோக்களும் கைப்பற்றப்பட்டதாக பெல்ஜிய வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். மேலும், இதன்போது கணனிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

விசாரணைக்குத் தேவையான தரவுகள் காணாமல் போவதைத் தடுக்க, வெள்ளிக்கிழமை முதல், 10 பாராளுமன்ற ஊழியர்களின் தகவல் தொழில்நுட்ப வளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

# மரம் முறிந்து விழுந்ததில் பெண்ணொருவர் மரணம்!

கொழும்பு, டிசெ. 14
தேயிலை கொழுந்து பறித்து கொ ண்டிருக்கையில் காய்ந்த மரம் ஒன்று தலையில் விழுந்த தில் எம்.டீ.தமயந்தி எனும் 51 வயதான குடும்பப் பெண் ஒரு வர் பலியாகி உள்ளார்.
பலாங்கொடை பின்னவலை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உடு முள்ள பகுதியில் வசிக்கும் இவர் தனது கணவருடன் வீட்டு தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருக்கையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ள தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் இடம்பெற்றவுடன் காயமடைந்த இவரை பலாங் கொடை போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார் என பொலிஸார் குறிப்பிட்ட னர். (அ)

# ரணிலுக்கு ராஜித முழு ஆதரவு

கொழும்பு, டிசெ. 14
நாட்டில் தற்போது ஏற்பட் டுள்ள நெருக்கடி நிலைமையை சமாளிப்பதற்கான வல்லமை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு இருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித் தார்.
எனவே, சர்வக்கட்சி அர சாங்கம் அமைத்தேனும் அவ ருக்கு ஆதரவு வழங்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.
2002 காலப்பகுதியில் சரி



வைச் சந்தித்திருந்த பொருளா தாரத்தைக்கூட ரணில் விக்கிர மசிங்க மீட்டிருந்தார் எனவும் ராஜித சேனாரத்ன சுட்டிக் காட்டினார். (அ)

# காரைநகரில் காணி சுவீகரிப்பு நடவடிக்கை தடுத்து நிறுத்தம்!

## மக்கள் கூடி எதிர்ப்பு வெளியிட்டனர்

யாழ்ப்பாணம், டிசெ. 14
**காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காரைநகர் - நீலங்காடு பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியை இலங்கை எலாரா கடற்படை முகாமுக்கு அளவிடுவதற்கு மக்கள் பாரிய எதிர்ப்பை வெளியிட்டனர்.**

குறித்த காணியை அளவிடு வதற்கு நில அளவைத் திணைக் களத்தினர் நேற்று வருகை தந்த போது அப்பகுதியில் கூடிய பொதுமக்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஒன்று கூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.
அதனையடுத்து அங்கு வந்த நில அளவைத் திணைக்களத்தி னர், மக்களுக்கு சொந்தமான காணியை கடற்படையினருக்கு அளவிடுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று எழுதி ஒப்ப மிடப்பட்ட எழுத்து மூலமான ஆவணத்தைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தனர்.



இந்த எதிர்ப்பு நடவடிக்கை யில் காணியின் உரிமையாளர் கள், சமூகமட்ட அமைப்பினர், தமிழ் தேசிய மக்கள் முன்னணி யினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண் டனர். (அ)

# ஜேர்மன் ரெபிஸ் தடுப்பூசி இலங்கைக்கு நன்கொடை

கொழும்பு, டிசெ. 14
சுகாதார அமைப்பிற்கு தேவையான 81 மில்லியன் ரூபா பெறுமதியான ரெபிஸ் தடுப் பூசிகளின் கையிருப்பு ஜேர்மன் அரசாங்கத்தினால் சுகாதார அமைச்சுக்கு நேற்று நன் கொடையாக வழங்கப்பட் டுள்ளது.
ஜேர்மன் அரசாங்கத்தின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச் சின் கீழ் ஜி.ஐ.இசட் திட்டத் தின் பணிப்பாளர் நிக்கோலஸ் லாமேட், சுகாதார அமைச்சில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் இத்தடுப் பூசிகளை கையளித்தார். (அ)

# வவுனியாவில் குடும்பம் ஒன்றிற்கு இராணுவத்தினரால் வீடு கையளிப்பு!

வவுனியா, டிசெ. 14
வவுனியா இராசேந்திரகுளம் கிராம சேவையாளர் பிரிவில் மூன்று பிள்ளைகளுடன் வறு மையில் வாழும் குடும்பம் ஒன் றிற்கு இராணுவத்தினரால் வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.
வீடற்ற அனைவருக்கும் வீடு கட்டிக்கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ், வடமாகாணத் தில் பொருளாதார சிரமத்து டன் வாழும் வறிய குடும்பங்க ளுக்கு புதிய வீடுகளை நிர்மா ணிக்கும் மற்றுமொரு பணியை நிறைவுசெய்து வறிய நிலையில் வாழும் குடும்பத்திற்கு வீடு கையளிக்கப்பட்டது.
இந்த நிதியுதவிக்காக சுமார் 35 இலட்சம் ரூபா தனியார் நன்கொடைகள் மூலமும், இராணுவம் முழு உழைப் பையும் ஏற்றுக்கொண்டுள்ளது டன், புதிய வீட்டின் பெறுமதி 5 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமாகும்.
வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் தளபதி மேஜர் ஜெனரல் சி.டி. ரணசிங்க மற்றும் ஏனைய அதிகாரிகளின் பங்கேற்புடன் வவுனியா பிர தேச செயலக அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ)

# பலாலி விமான நிலையத்துக்கு யாழ். நகரிலிருந்து பஸ் சேவை

## ஒரு வழி கட்டணம் 500 ரூபா

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்.நகரில் இருந்து பலாலி விமான நிலையத்துக்குப் போக்கு வரத்து சேவைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மீளவும் சேவைகளை ஆரம்பித்துள்ள நிலையிலேயே இந்தப் போக்கு வரத்து சேவையும் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.
யாழ் - பலாலி இடையே யான போக்குவரத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸே தற்போது இயக்கப்படுவதாகவும் தெரி விக்கப்பட்டது.
திங்கள், செவ்வாய், வியா ழன் மற்றும் சனி ஆகிய தினங் களில் சென்னை விமான நிலை யத்திலிருந்து புறப்படும் விமா னம், முற்பகல் 10.50 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும். பின்னர் பலாலி விமான நிலையத்திலிருந்து, 11.50 மணிக்கு சென்னை நோக் கிப் புறப்படும்.
இந்த விமான சேவை பயணி களுக்காகவே யாழ்.நகர் புதிய பஸ் நிலையத்திலிருந்து திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய தினங்களில் காலை 8 மணிக்கு பலாலி விமான நிலையம் நோக்கி பஸ் சேவை இடம்பெறும்.
அதேபோன்று நண்பகல் 12 மணிக்கு பலாலி விமான நிலை யத்திலிருந்து யாழ்.நகர் நோக்கி பஸ் சேவை இடம்பெறும். தேவை ஏற்படின் ரயில் நிலை யம் வரையிலும் சேவை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு பயணிக்கும் பயணிகளுக்கான ஒரு வழிக் கட்டணமாக 500 ரூபா அறவி டப்படும். மேலும் பயணப் பொதி ஒன்றுக்கு 200 ரூபா அறவிடப்படும்.
இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு யாழ்.மாவட்ட பேருந்து நிலைய பொறுப்பதி காரியை 076 5378432 என்ற எண்களில் தொடர்புகொள்ள முடியும் என வட மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் அறிவித்துள் ளார். (அ)

# ஜனவரி 05 பாராளுமன்றம் கூடும்

கொழும்பு, டிசெ. 14
நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளின் பின்னர் புதிய வருடத்தின் பாராளுமன்ற அமர்வை ஜன வரி 05ஆம் திகதி நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரி வித்தார்.
பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நடை பெற்ற பாராளுமன்ற அலுவல் கள் பற்றிய குழுக் கூட்டத்தி லேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.



இதற்கமைய அன்றைய தினம் மு.ப 9.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பது டன் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட் டுள்ளது.
இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரையான காலப்பகுதி புனர்வாழ்வுப் பணியகச் சட்ட மூலம் மற்றும் குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலம் ஆகியவற்றின் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதங்களை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித் தார்.
இதன் பின்னர் பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை அரசாங்கத்தினால் கொண்டு வரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரே ரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள
யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும்
அனைத்து விளம்பரங்களும்
யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# தேர்தலுக்கு வேட்பு மனு கோரும் பணியை ஆரம்பித்தது எதிர்க்கட்சி!

கொழும்பு, டிசெ. 14

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கோரும் பணியை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்துள்ளதாக அதன் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இளைஞர் சமூகம், தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூக அங்கீகாரம் பெற்றவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.



அதன்படி, "உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர் விண்ணப்பம்" என்ற தலைப்பின் கீழ் வேட்பாளர் விண்ணப்பங்களை பொதுச் செயலாளர், ஐக்கிய மக்கள் சக்தி, எண். 592, பங்களா சந்தி, கோட்டே வீதி, பிடகோட் என்ற முகவரிக்கு, அனுப்புமாறு அவர் கேட்டுள்ளார்.

அல்லது generalse cretariesjb@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 011 287 0211 அல்லது 011 287 0212 என்ற தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

# உமா ஓயா திட்டம் மூலம் 120 மெகாவோட் மின்சாரம்

கொழும்பு, டிசெ. 14

உமா ஓயா திட்டத்தின் மூலம் ஜூன் மாதத்திற்குள் தேசிய மின்சார அமைப்பில் 120 மெகாவோட் சேர்க்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய நீர் மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் நேற்று காலை கட்டுமான நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் இது தொடர்பில் தெரிய வந்துள்ளது. (அ)

# வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர் போராட்டம்

வவுனியா, டிசெ. 14

வவுனியா பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் நேற்று அடையாள பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் உள்ள கல்விசார் ஊழியர்கள் அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினைச் சேர்ந்த கல்விசார் ஊழியர்களும் அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அநீதியான அரசாங்கத்தின் அசாதாரணமான வரி விதிப்புக் கொள்கை மற்றும் மக்களை அழுத்தத்திற்குள்ளாக்கும் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்ப்போம் என்ற தொனிப் பொருளினை முன்வைத்தே இந்த பணபகிஷ்கரிப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக நேற்று வவுனியா பல்கலைக்கழகத்தில் எந்தவிதமான கல்வி நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை என வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எஸ்.திருஞானசம்பந்தர் தெரிவித்தார். (அ)

# வசந்த முதலிகேக்கு ஜனவரி 17 வரை விளக்கமறியலில்!

கொழும்பு, டிசெ. 14

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று பிற்பகல் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதலிகே 2023 ஜனவரி 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள முதலிகே நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபரின் கருத்தைப் பெறும் வரையில் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதன்படி, நேற்று முதலிகே நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அடுத்த வருடம் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

# விவசாய அமைச்சின் கீழ் உள்ள எட்டு நிறுவனங்களில் மாற்றம்!

கொழும்பு, டிசெ. 14

விவசாய அமைச்சின் கீழ் வரும் எட்டு நிறுவனங்கள் தொடர்பில் முக்கிய தீர்மானம் எட்டப்படும் என விவசாய, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அகுனகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அமைச்சர், இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் மில்கோ மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை என்பன ஒன்றிணைக்கப்படும்.

தற்போதுள்ள இரண்டு உர விநியோக நிறுவனங்களான இலங்கை உர நிறுவனம் மற்றும் கொழும்பு வர்த்தக உர நிறுவனம் ஆகிய இரண்டும் ஒரே நிறுவனமாக மாற்றப்படும்.

இதேவேளை, ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அனுராதபுர தேசிய அறுவடை முகாமைத்துவ நிறுவனம் ஆகிய இரண்டும் ஒரே நிறுவனமாக்கப்படவுள்ளன.

இலங்கை ஹார்ட்லேண்ட் அதிகார சபை மற்றும் உணவு ஊக்குவிப்புச் சபை என்பன ஒன்றிணைக்கப்படவுள்ளன.

பொதுச் செலவீனங்களைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, எட்டு நிறுவனங்களும் நான்காக இணைக்கப்படும். அதே நேரத்தில் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழுவின் எண்ணிக்கையையும் குறைக்கப்படும்.

செலவுகள் 50 வீதத்தால் குறைக்கப்படும்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஜனாதிபதி இந்த நடவடிக்கைக்கு சம்மதம் தெரிவித்துள்ளார்-என்றார். (அ)

# தேசிய உப்பு கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக அனுர பண்டார


கொழும்பு, டிசெ. 14

தேசிய உப்பு கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக கலாநிதி அனுர பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தேசிய உப்பு கூட்டுத்தாபன மானது ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ளது.

அதற்கமைய, இந்நிகழ்வில் ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)




## மரண அறிவித்தல்

### கோபாலபிள்ளை கனகரத்தினம்



யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 2ம் வட்டாரம் மாரியம்மன் கோவிலடியை வதிவிடமாகவும், பிரான்ஸ் Le Blanc-Mesnil ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை கனகரத்தினம் கடந்த 09.12.2022 வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை – கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு – நல்லதங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும்,கற்பகத்தின் (அருளம்மா) பெறாமகனும்,மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சசிகலா, இதயகலா, சயந்தன், தயாபரன், இளங்கீரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை, நீலமேகநாதன் மற்றும் விஜயலட்சுமி, கிருஸ்ணாதேவி, சிவானந்தன், சிவராஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் – சரஸ்வதி, புவனேஸ்வரி – குகனேசன், யோகேஸ்வரி – பத்மநாதன், லீலாவதி – கமலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும்,குணம், தர்மரத்தினம்(தர்மா), யனுசுயா, கௌரி, நர்மதா, ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கஜானா, நேத்ரா ராகுல், கௌசிக், தீபக், பவீன், மௌலீசன், மேகலன், திகம்பரி, கவீனா, சகீனா ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (15.12.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில், 95 ரூ மார்செல் செம்பாட், 93430 வில்லேனியூஸ்,பிரான்ஸ் எனும் முகவரியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி பரராஜசிங்கம் ஏகாம்பிகை



யாழ். சரவணையைப் பிறப்பிடமாகவும், சரவணை, நீர்கொழும்பு, பிரான்ஸ் Gonesse ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் ஏகாம்பிகை கடந்த 08-12-2022 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முத்துமணி – சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து – செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், ஷகீலா(செல்வி- ஜேர்மனி), லலிதா(கனடா), சுரேஷ்(ஜேர்மனி), சதீஷ்(ஜேர்மனி), சுபாஜினி(கனடா), தர்ஜினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்துஜன் – வருனிகா, நிருஷன் – ஜனீனா, கோபிநாத், நிவேதன், நிதர்ஷன், திலக்ஷன், விதுஷன் – ஆர்த்தி, தக்சிகன், தனிஷா, ஷபிஷன், அஸ்வினா, வசீலா, ஸ்ஷக், வர்ஷா, அபிஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும், நவனீதன்(ஜேர்மனி), சிவா(கனடா), நிரஞ்ஜினா(ஜேர்மனி), வாநிதி(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான நௌஃபி(கனடா), அம்பிகைநேசன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,கனகரட்ணம்(கனடா), புவனேஸ்வரி(பிரான்ஸ்), காலஞ்சென்ற சோமசுந்தரம், தியாகேஸ்வரி(கனடா), பற்குணசிங்கம்(கனடா), கேதீஸ்வரன்(பிரான்ஸ்), நிலாமதி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,மகேந்திரமணி(கனடா), காலஞ்சென்ற கனகலிங்கம், சுகன்யா(கனடா), சுஜேந்திரன்(கனடா), அனுஷ்யா(கனடா), கலைமகள்(பிரான்ஸ்), யோகேந்திரன்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,ரமேஷ், நரேஷ், பூமிகா, வாகீசன், குமுதினி, விஜிதா, யசிந்தா, யாழினி, ஜனார்த்தனன், ஜதுர்சன், சதீஷ்குமார், பிறஷீலா, சௌமியா ஆகியோரின் பெரியத் தாயாரும்,சந்திரிக்கா, ராதிகா, நர்மதா, காலஞ்சென்ற தேவிகா, பவித்திரா, மதுரிகா, மயூரன், நிரோசன், செந்தூரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (15.12.2022) வியாழக்கிழமை ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில், 95 ரூ மார்செல் செம்பாட், 93430 வில்லேனியூஸ்,பிரான்ஸ். எனும் முகவரியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**

## நல்லிணக்கத்துக்....

இனப் பிரச்னைக்கு தீர்வு எட்டும் நோக்குடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்த சர்வகட்சி கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், மலையகத் தமிழரை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தென்னிலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் கலந்து கொண்டன.

ஜனாதிபதியின் உரையை தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், "13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழர் பகுதிகளில் தற்போதும் நீடிக்கும் காணிகள் ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே அபகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடியாக நீதி கிடைக்க வேண்டும். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற விடயங்களை முன்வைத்தார்.

இதைத் தொடர்ந்து, முன்னாள் நீதி அமைச்சரும் இப்போதைய வெளிவிவகார அமைச்சருமான அலி சப்ரி, தற்போதைய நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மூலமாக செய்யப்பட்ட விடயங்களை முன்வைத்தனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது. அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் சட்ட விவகாரங்களை கருத்தில் கொண்டே அவர்களை விடுதலை செய்ய முடியும். அவர்களை படிப்படியாக விடுதலை செய்ய முடியும் என்று கூறினர்.

**வேண்டியது நீதியே**

அவர்களின் கருத்துக்கு பதில் உரைத்த சம்பந்தன், "காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அவர்களின் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும். அவர்கள் எதிர்பார்ப்பதும் அதனைத்தான்..." என்று கூறினார்.

தொடர்ந்து, மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், பிளவுபடாத இலங்கைக்குள் - உள்ளக சுயநிர்ணயத்துடன் கூடிய சமஷ்டி வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு உச்ச அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்று சம்பந்தனும், விக்னேஸ்வரனும் வலியுறுத்தினர்.

தொடர்ந்து இந்த அனைத்து விடயங்களையும் எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக நடைமுறைப்படுத்த ஆரம்பிக்க வேண்டும் என்று சம்பந்தன் வலியுறுத்தினார்.

இதன்பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "13ஆவது திருத்தச் சட்டத்தை நான் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வருகிறேன். சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் உட்பட எல்லோரும் இப்போதுதான் இதை வலியுறுத்துகின்றனர். இதை வரவேற்கிறேன்" என்றார்.

**13ஐ ஆதரித்த ஹக்கீம்**

இதைத் தொடர்ந்து சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்றும் வலியுறத்தினார். இதன் பின்னர் படிப்படியாக முன்னேற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றும் கூறினார்.

13ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக கருத்தை வெளியிட்ட மனோ கணேசன் மலையக தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் கூறினார்.

**- ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு-**

எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸ, 13ஆம் திருத்தத்துக்கு ஆதரவளித்ததுடன், பிளவுபடுத்த முடியாத இலங்கைக்குள் - ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று கூறினார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களில் ஒருவரான அங்கஜன் இராமநாதன், சமஷ்டி மூலம் இனப் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதேசமயம், அபிவிருத்தி பணிகளும் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

**நசீர் அஹமட் எதிர்ப்பு**

சுற்றாடல் துறை அமைச்சரான நசீர் அஹமட் மாத்திரம் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படக்கூடாது என்று எதிர்ப்பைக் கிளப்பினார்.

சுமந்திரன் எம். பி., அரசமைப்பு விடயத்தை ஆரம்பத்தில் தொடங்க வேண்டியதில்லை. இது தொடர்பாக பல அறிக்கைகள் - இணக்கப்பாடுகள் - வரைவுகள் கூட இருக்கின்றன. அவற்றையெல்லாம் சேர்த்து ஓர் இணக்கப்பாட்டை எட்டி தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். ஜனவரி மாதத்திலேயே இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஏனெனில் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்னைக்கு தீர்வு என்ற காலக்கெடுவை வைத்திருக்கிறார். எனவே, ஜனவரியில் முடிவு - இணக்கம் ஒன்று எட்டப்பட வேண்டும். இது மிகக் குறுகிய காலம் என்றாலும் அனைவரும் முயற்சிப்போம் - என்றார்.

இந்த சந்திப்பு தொடர்பில் ஜனவரியில் ஒரு திகதியில் கூடிப் பேசுவது என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**மகிந்த மௌனம்**

இந்தச் சந்திப்பில் பொதுஜன பெரமுன தரப்பிலிருந்து மகிந்த ராஜபக்ஷ, சாகர காரியவசம் ஆகியோர் பங்கேற்ற போதிலும் அவர்கள் எந்த கருத்தையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்திய....

படுத்தி வருவதாக இந்தியா - மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்நிலையில், கடந்த ஓகஸ்ட் மாதம் சீனாவின் உளவு கப்பல் அம்பாந்தோட்டைக்கு வ்நதது.

இதைத் தொடர்ந்து, அண்மையில் இந்திய புலனாய்வு பிரிவினான றோ தலைவர் சமந்த் குமார் கோயல் இரகசிய பயணமாக இலங்கை வந்து சென்றார்.

இந்நிலையிலேயே நான்கு நாட்கள் பயணமாக இந்திய கடற்படை தளபதி இலங்கை வந்துள்ளார். அவர், திருகோணமலை பகுதியில் உள்ள கடற்படை மற்றும் கடல்சார் அக்கடமியில் பயிற்சி பெற்றவர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு டிசெ. 15 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்நிகழ்வில் அவர் பங்கேற்பார்.

அத்துடன், நாட்டின் பல்வேறு பாதுகாப்பு தலங்களுக்கு செல்லும் அவர், இந்தியா-இலங்கை இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## திருக்கேதீஸ்வர....

தினமாக இந்திய மத்திய அரசு பிரகடனப்படுத்தியதை முன்னிட்டு, காசியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மேலும், இலங்கையில் மன்னாரில் உள்ள திருகேதீஸ்வரம் கோவிலை மீட்டுள்ளோம். பிரதமர் சில வருடங்களுக்கு முன்னர் சென்று அந்த ஆலயத்துக்கு சென்றிருந்தார். அந்த ஆலயம் 12 வருடங்கள் மூடப்பட்டிருந்தது. நாம் அந்த ஆலயத்தை புதுப்பித்து திறந்தோம். நாம் காட்டிய ஆர்வத்தால் அது சாத்தியமானது. பிரதமர் மோடி பதவியேற்றதன் பின்னர் எமது கலாசாரத்தையும் மரபுரிமையையும் பாதுகாப்பதோடு, இவ்வாறு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும் வெளியுறவுதுறை அமைச்சில் ஒரு தனிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது- என்றும் கூறினார்.

# இரட்டை குடியுரிமையை துறப்பேன்! ஆனால், அதற்கான தேவை இல்லை

## பஸில் ராஜபக்ஷ சொல்கின்றார்

கொழும்பு, டிசெ. 14

"எனது இரட்டை குடியுரிமையை கைவிடுவேன். எனினும், தற்போது அவ்வாறான தேவை இல்லை - என்று கூறியிருக்கிறார் முன்னாள் நிதி அமைச்சரான பஸில் ராஜபக்ஷ.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணிலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அந்த நேர்காணலில்,

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை பொதுமக்களின் நலனுக்காக தனது இரட்டைக் குடியுரிமையை தியாகம் செய்து விட்டு தற்போது அவதிப்பட்டு வருகிறார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களுக்காக தியாகம் செய்தார். ஆனால் அதன் விளைவாக துன்பங்களை அனுபவித்தார்", என்றார்.

"இதேபோன்ற தியாகத்தை நீங்களும் செய்வீர்களா?" என வினவியதற்கு பதிலளித்த பஸில், "அந்த நேரத்தில் தேவை ஏற்பட்டால் எனது இரட்டை குடியுரிமையை கைவிடுவேன். எனினும், தற்போது அவ்வாறான தேவை இல்லை"- என்றார்.

முன்னாள் ஜனாதிபதி அச்சம் அடையாமல் இன்னும் சில நாட்கள் பொறுத் திருந்திருந்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்த்திருக்க முடியும் - என்றும் கூறினார். (ஐ)

## கே. கே. எஸ்.....

கேசன்துறை ஜனவரி மத்தியில் ஆரம்பிக்கப்படும் என்று துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவரின் அமைச்சில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

தம்பதிவ யாத்திரைக்கு (இந்தியாவின் பௌத்த தலங்களுக்கான யாத்திரை) செல்லும் இலங்கை யாத்திரிகர்களுக்கும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களுக்கும் இந்த பயணிகள் கப்பல் சேவை பெரும் நிவாரணமாக அமையும்.

ஒரு பயணிக்கான கட்டணம் 60 அமெரிக்க டொலர் என்பதுடன் 100 கிலோ எடையுள்ள பொருட்களை ஒருவர் எடுத்துச் செல்லமுடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## சீனா, இந்தியா,....

குணவர்த்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் மிக்க தரப்பினர் நாம் அல்ல. மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளே சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளனர்.

சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் மேற்கொண்ட பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க , ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஜனவரி மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறக்கூடும் என அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் ஊடாக இது தொடர்பில் அறிந்து கொள்ள முடியும் - என்றார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை கடனுதவியைப் பெற்றுக் கொள்ள உள்ளமையுடன் தொடர்புடைய முக்கியத்துவம் மிக்க மாநாடு சீனாவின் பீஜிங் நகரில் கடந்த வாரம் இடம்பெற்றது.

நாட்டில் சீன எக்சிம் வங்கி மற்றும் சீன அபிவிருத்தி வங்கி என்பவற்றின் தலைவர்கள் இணைந்து உலக வங்கி தலைவர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது சர்வதேச பொருளாதார நிலைமை மற்றும் இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கடன் நெருக்கடி குறித்து நேர்மறையான அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பெரமுனவுடன்....

யக் கட்சியுடன் கூட்டணி அமைக்க தயார் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் நேற்றுமுன்தினம் அறிவிப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் இது சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவிடம் நேற்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## நியதிகளுக்கு....

சட்டவிரோத கடல் அட்டைப் பண்ணைகள் இருந்தால் அடையாளம் காட்டும் பட்சத்தில் அவற்றை அகற்றத் தயார் எனவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் முகமாக, ஒரு சிலர் செயல்படுவது கவலை அளிப்பதாகவும் அவர்கள் கூறினர். (ஐ)

## கல்வி....

அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய நச்சுத் தன்மையுடைய போதைப்பொருட்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பாவனையைத் தடுப்பதற்கான ஜனாதிபதி செயலணியை நிறுவும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று அமைச்சர் பந்துல குணவர்த்தன இவற்றைத் தெரிவித்தார்.

மேலும், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் தற்போது போதைப்பொருள் பயன்பாடு தீவிரமடைந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இவ்வாரம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நீண்ட கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. எதிர்கால சந்ததியினரை இலக்கு வைத்து குறுகிய கால திட்டங்கள் இவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது என்பதே அமைச்சரவையின் நிலைப்பாடாகவுள்ளது.

குறிப்பாக பெற்றோருக்கு தமது பிள்ளைகளையும் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு தமது மாணவர்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலைமையே தற்போது காணப்படுகிறது. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு நச்சுத் தன்மையுடைய போதைப்பொருட்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பாவனையைத் தடுப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதி செயலணி ஒன்றை ஸ்தாபிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய குறித்த செயலணியை விரைவில் நிறுவுவதற்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடிகளைப் போன்று இரண்டாவது தேசிய பிரச்னையாக இந்த போதைப் பொருள் பாவனை காணப்படுகிறது. அதற்கமையவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி! இந்தியாவுக்கு சிறிய சலுகை!

## போட்டியில் இலங்கை மூன்றாமிடம்



டுபாய், டிசெ. 14

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற பல அணிகள் போட்டியிடுகின்றன. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் தோற்றுள்ளதால் இந்திய அணிக்கு சிறு சலுகை கிடைத்துள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கான புள்ளிகள் பட்டியலில் இந்திய அணி தற்போது 4ஆவது இடத்தில் உள்ளது. இந்திய அணி அடுத்ததாக பங்களாதேஷுக்கு எதிராக 2 டெஸ்ட்களிலும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 4 டெஸ்ட்களிலும் விளையாடவுள்ளது.

இந்த 6 டெஸ்ட்களிலும் இந்திய அணி வென்றால் 68.06 வீதம் என வலுவான நிலையில் இருக்கும். இதுவே இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற போதுமானதாக இருக்கும். தற்போது 75வீதத்தை வைத்திருக்கும் ஆஸி. அணி இந்தியாவுடன் தோற்றால் கீழே இறங்கிவிடும்.

இந்த 6 டெஸ்ட்களில் ஒரு டெஸ்டில் இந்திய அணி தோற்றாலும் 62.5வீதமாக இருக்கும். இந்த எண்களை அவுஸ்திரேலியாவும் தென்னாபிரிக்காவும் தாண்ட முடியாது. ஆனால், 2 டெஸ்ட்களில் தோற்றால் 56.94 % என இறங்கி விடும். பிறகு மற்ற அணிகளின் வெற்றி, தோல்விகளைக் கொண்டே இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற முடியும்.

இங்கிலாந்திடம் தோற்றதால் பாகிஸ்தான் அணியால் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி புள்ளிப் பட்டியலில் அவுஸ்திரேலியா 75 வீதம், தென்னாபிரிக்கா 60 வீதம், இலங்கை 53.33 வீதம், இந்தியா - 52.08 வீதம், இங்கிலாந்து - 44.44 வீதத்தைக் கொண்டுள்ளன.



# தமிழரின் பாரம்பரிய உடையில் ஜடேஜா!

சென்னை, டிசெ. 14

தமிழரின் பாரம்பரிய உடையை உடுத்தி அதன் புகைப்படத்தைச் சமூகவலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார் ஜடேஜா.

பிரபல கிரிக்கெட் வீரரான ஜடேஜா, இந்திய அணிக்காக 60 டெஸ்ட்கள், 171 ஒருநாள், 64 இருபது -20 போட்டிகளில் விளையாடியுள்ளார். 210 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடியுள்ளார். டோனி, ரெய்னாவுக்கு அடுத்ததாக 150 போட்டிகளில் விளையாடிய 3ஆவது சென்னை வீரர் என்ற பெருமையையும் அடைந்துள்ளார்.

ஐ. பி. எல். 2022 போட்டியில் சென்னை அணியின் புதிய தலைவராக ஜடேஜா நியமிக்கப்பட்டார். 2012 முதல் சென்னை அணியில் விளையாடும் ஜடேஜா, அந்த அணியின் 3ஆவது அணித் தலைவர் என்ற பெருமையைப் பெற்றார். ஆனால், சென்னை அணி முதல் 8 ஆட்டங்களில் 2 வெற்றிகளை மட்டும் பெற்றதாலும் தன்னுடைய துடுப்பாட்டம் மோசமானதாலும் தலைமை பதவியிலிருந்து திடீரென விலகினார் ஜடேஜா. இதையடுத்து தலைமை பொறுப்பை டோனி மீண்டும் ஏற்றுக்கொண்டார்.

இந்நிலையில் தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சட்டை, துண்டு அணிந்து புதிய தோற்றத்துடன் உள்ள புகைப்படத்தைச் சமூகவலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார் ஜடேஜா. தென்னிந்தியாவின் அடையாளத்தை உணர்கிறேன். தமிழ்க்காதல் என பதவிட்டுள்ளார். இதையடுத்து, அழகிய தமிழ் மகன் எனக் குறிப்பிட்டு ஜடேஜாவின் புகைப்படத்தை சென்னை அணி பகிர்ந்துள்ளது. (ஐ)

# ஐ. சி. சியின் சிறந்த வீரராக இங்கிலாந்தின் ஜோஸ் பட்லர்

டுபாய், டிசெ.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஒவ்வொரு மாதமும் சிறப்பாக செயல்படும் வீரர், வீராங்கனைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்கி வருகிறது.

இந்நிலையில், நவம்பர் மாதத்துக்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை ஐ. சி. சி. அறிவித்துள்ளது. அதன்படி நவம்பர் மாத சிறந்த வீரராக இங்கிலாந்து அணியின் இருபது -20 தலைவர் ஜோஸ் பட்லர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நவம்பர் மாத சிறந்த வீராங்கனையாக பாகிஸ்தானின் சித்ரா அமீன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இருபது -20 உலகக்கோப்பையில் அதிரடி காட்டியதுடன் இங்கிலாந்து அணிக்கு இரண்டாவது முறையாக இருபது - 20 உலகக்கோப்பையை வென்று கொடுத்தார்.

அந்த தொடர் முழுவதும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய பட்லர் இந்தியாவிற்கு எதிரான அரையிறுதி போட்டியில் 49 பந்துகளை சந்தித்து 80 ஓட்டங்களை சேர்த்து அணி வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைந்தார்.

சமீபத்தில் நடந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரில் அயர்லாந்து அணியை பாகிஸ்தான் அணி வென்றது. இதற்கு சித்ரா அமீன் முக்கிய காரணமாக அமைந்தார். இதேபோன்று 20 ஓவர் உலக கோப்பையை இங்கிலாந்து அணி கைப்பற்றுவதற்கு ஜோஸ் பட்லர் ஒரு முக்கிய காரணமாக இருந்தார். அதனால் இவர்கள் இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

# இந்திய அணியின் ஆக்ரோஷத்தை இன்றைய ஆட்டத்தில் பார்ப்பீர்கள்!

## கே. எல். ராகுல் தெரிவிப்பு



டாக்கா, டிசெ. 14

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டி இன்று புதன்கிழமை விளையாடவுள்ளது இந்திய கிரிக்கெட் அணி. இந்நிலையில், “இந்திய அணியின் ஆக்ரோஷ ஆட்டத்தை நிச்சயம் பார்ப்பீர்கள்”, என பத்திரிகையாளர் சந்திப்பில் கே. எல். ராகுல் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. அண்மையில் முடிந்த ஒருநாள் தொடரை 1-2 என இந்தியா இழந்த நிலையில் இரு அணிகளும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளன. இந்த சூழலில் ராகுல் இப்படி சொல்லி உள்ளார்.

“இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஆக்ரோஷ அணுகுமுறை என்னை ஈரத்துள்ளது. டெஸ்ட் கிரிக்கெட் இப்படி விளையாடப்படுவதை பார்க்கும்போது ஆர்வமாக உள்ளது. அச்சமின்றி, ஆக்ரோஷமாக ஆட்டத்தை சவாலாக எடுத்துக் கொண்டு அதில் முடிவையும் எட்டுகிறார்கள். அந்த முறை அவர்களுக்கு பலன் கொடுத்து வருகிறது.

ஒவ்வோர் அணியும் ஒவ்வொரு விதமாக விளையாடும். ஆனாலும் சிறப்பாக செயல்படும் அணிகளிடமிருந்து சில விஷயங்களை கற்றுக் கொள்வதில் தவறு இல்லை. இருந்தாலும் அது சூழலுக்கு ஏற்ற வகையில் மாறும். எனது தலைமையில் இந்திய அணி ஆக்ரோஷமான பாணியில் விளையாடும். அதை ரசிகர்கள் நிச்சயம் எதிர்பார்க்கலாம்” என சொல்லியுள்ளார். இந்தத் தொட ரின் முதல் போட்டியில் அவர் தலைவராக இந்திய அணியை வழிநடத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரஹானே, இஷாந்த், சஹாவை ஒப்பந்தத்தில் விலத்தத் திட்டம்?



புதுடில்லி, டிசெ. 14

இந்திய கிரிக்கெட் வீரர்கள் 4 வகையாக தரம் பிரிக்கப்பட்டு, ஒப்பந்த அடிப்படையில் ஆண்டு ஊதியம் வழங்கப்படுகிறது. இதன்படி ‘ஏ பிளஸ்’ பிரிவில் இடம் பெறும் வீரர்க ளுக்கு ரூ. 7 கோடி (இந்திய மதிப்பில்), ‘ஏ’ பிரிவு வீரர் களுக்கு ரூ.5 கோடி, ‘பி’ பிரிவு வீரர்களுக்கு ரூ.3 கோடி, ‘சி’ பிரிவு வீரர்களுக்கு ரூ.1 கோடி ஊதியமாக அளிக்கப் படுகிறது.

அடுத்த தொடருக்கான வீரர்களின் ஒப்பந்த பட்டியல் வருகிற 21ஆம் திகதி நடக்கும் கிரிக்கெட் சபையின் உயர்மட்ட குழு கூட்டத்தில் இறுதி செய்யப்படுகிறது. இதில் சில அதிரடி மாற்றங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய 20 ஓவர் அணியின் வருங்கால அணித் தலை வர் என்று அடையாளம் காணப்பட்டுள்ள சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யா சி பிரிவில் இருந்து குறைந் தது பி தரத்துக்கு உயர்த்தப்படுகிறார்.

முன்னாள் துணை தலைவர் ரஹானே, மூத்த வேகப் பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மா, விக்கெட் காப்பாளர் விருத்திமன் சஹா ஆகியோர் டெஸ்ட் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டு விட்டனர். இதனால் அவர்கள் மூவரும் ஒப்பந்தப்பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

இதே சமயம் 20 ஓவர் போட்டியின் துடுப்பாட்ட வீரரான சூர்யகுமார் யாதவ் கடந்த ஓராண்டாக அதிரடியில் வெளுத்து கட்டுகிறார். இதனால் அவர் ‘சி’யில் இருந்து ‘பி’ அல்லது ‘ஏ ‘ பிரிவுக்கு மாற்றப்படுவார் என்று தெரிகிறது. இதே போல் ஷப்மன் கில் ‘சி’ இருந்து ‘பி’ பிரிவுக்கு வருகிறார். சமீபத்தில் ஒருநாள் போட்டியில் இரட்டை சதம் அடித்து சாதனை படைத்த இஷான் கிஷன் ஒப்பந்த பட்டியலில் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.